Registered as a NewsPaper

விலை ரூ.10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி–20 | 06–11–2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை–262


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247

# ஆயுதக் குழுக்களைக்களையவேண்டும்; கண்காணிப்புக்குழு மீண்டும் வலியுறுத்து

## யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கெதிராக செயற்படுவதாகவும் குற்றச்சாட்டு!

(கொழும்பு)

**சிறிலங்கா அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களைக்களையவேண்டும் என்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலட்ஸ்டொபிட்டிர் தெரிவிக்கையில், இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராகவும் நாட்டினது சட்டங்களுக்கு எதிராகவும் செயற்பட்டு வருகின்றன.

இராணுவப் பகுதிகளில் அரசாங்கமும் விடுவிக்கப்படாத பகுதிகளில் விடுதலைப் புலிகளுமே அப்பிரதேசங்களின் பாதுகாப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. சின்ன ஊறணியில் படையினர் திடீர் சோதனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சின்ன ஊறனிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் நேற்றுப் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

காலை 8.30 மணி முதல் சிறிலங்கா இராணுவத்தினராலும், பொலிசாராலும் பாரியளவில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது இராணுவத்தினரும், பொலிசாரும் மக்களை துருவித் துருவி விசாரணை செய்தனர். மக்களின் வீடுகளும் கடும் சோதனைக்களுக்கு உள்ளாக்கப்பட்டன.

பல மணி நேரம் இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டு மக்கள் துன்புறுத்தப்பட்டனர்.

## வரும் 15 ஆம் திகதி தொலைக்காட்சியில் சனாதிபதியின் இறுதி உரை

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 15 ஆம் திகதி தொலைக்காட்சியில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

சனாதிபதி பொறுப்பிலிருந்து அவர் ஆற்றும் கடைசி உரை இதுவாகும்.

இனப்பிரச்சினைத் தீர்வு, சமாதான முயற்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உட்பட பல விடயங்கள் தொடர்பில் சந்திரிகா தமது இந்த உரையின் போது கருத்துக்களை வெளியிடுவாரெனத் தெரிய வருகிறது.

சிறிலங்கா அரசியலமைப்பின் படி தேர்தல் முடிவுகள் வெளியாவதுடன் சனாதிபதியினது பதவிக்காலம் முடிவடைகிறது. எனினும் புதிய சனாதிபதி பதவியேற்று கடமைகளைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதித்தேர்தல் தொடர்பாக புலிகள் முடிவு எதனையும் எடுக்கவில்லை

### யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த முடிவினையும் எடுக்கவில்லை அதேவேளை எந்த நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தவும் இல்லை என விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

பளையில் அமைந்துள்ள யாழ். மாவட்ட தலைமை அரசியல் பணிமனையில் வைத்து நேற்று முன் தினம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பொது அமைப்புக்கள் கோருவது குறித்து அவர் தெரிவிக்கையில் தேர்தலில் வாக்களிப்பதும் வாக்களிக்காமல் விடுவதும் மக்களின் பொறுப்பு.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அலரி மாளிகை சுற்றாடலில் நேற்று திடீர் தேடுதல்

(கொழும்பு)

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் இராணுவக் குண்டு செயல் இழக்கச் செய்யும் பிரிவினரால் நேற்றுப் பிற்பகல் தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி ரொட்டுண்டா காடன்ஸில் குண்டு ஒன்று வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த செய்தியை அடுத்தே இந்த விசேட தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எப்படியிருப்பினும் தேடுதல் நடவடிக்கையின் பின்னர் எந்தவிதமான குண்டுகளும் கண்டு பிடிக்கப்படவில்லை எனப் பொலிஸ் துறையினர் தெரிவித்துள்ளனர். (32

## பொத்துவில் கடற்பிரதேசத்தில் ஐந்து டிங்கி படகுகள் பிடிபட்டன

(அம்பாறை)

அம்பாறை பொத்துவில் கடற்பிரதேசத்தில் நங்கூரம் இடப்பட்டிருந்த ஐந்து டிங்கிப் படகுகள் சிறிலங்கா கடற்படையினரால் பிடிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் வைத்து நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக சிறிலங்கா கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் கடற்கரையிலிருந்து 50 கடல் மைல் தொலைவில் இந்தப் படகுகள் நங்கூரம் இடப்பட்டிருந்தபோது கைப்பற்றப்பட்டதாக அவர் கூறினார். மீனவர்கள் சிலரிடமிருந்து கிடைக்கப்பெற்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கடற்படைத்தள வீதியில் ஒருவர் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை பெரியகடை கடற்படைத்தள வீதியில் கடற்படை கிழக்குப் பிராந்திய அலுவலக பிரதான நுழைவாயிலுக்கு அருகில் உந்துருளியில் சென்று கொண்டிருந்த ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

துரைராஜா கண்ணன் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். திருகோணமலைப் பொலிசார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர் இராணுவத்தினருக்கு தகவல்கள் வழங்கி வருபவர் எனப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## தமிழ்மக்கள் குறித்து ரணில் பேசுவதன் பின்னணியில் அரசியல் சதித்திட்டமுள்ளது

### விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்



(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் தமிழ் மக்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பேசிவருவதன் பின்னணியில் பாரிய அரசியல் சதித்திட்டமுள்ளது என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"புலிகளின் குரல்" வானொலியின் அரசியல் அரங்க நிகழ்ச்சியில் க. வே. பாலகுமாரன் கூறியுள்ளதாவது;

எங்கள் மக்களது அரசியல் எழுச்சி என்பது முன்பு எப்போதையும் விட உச்ச நிலையில் இருக்கிறது.

இந்தச் சூழலில் சிறிலங்கா சனாதிபதித்தேர்தல் நடைபெறவுள்ளது. மகிந்த ராஜபக்ஷவினது வாக்குறுதிகள் இதுவரை வரலாற்றின் உச்ச சாதனையை எட்டிவிட்டன. எவரும் வழங்காத வாக்குறுதிகளை வழங்கிவிட்டார். இனிமேல் வாக்குறுதிகள் அளிக்கப் போகிறவர்களுக்கு பெரும் துன்பம்தான். ரணில் கூட என்ன சொல்வது என்று தெரியாத நிலையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் காயம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பிரதேசத்தில் செம்மன்னோடையில் நேற்று அதிகாலை நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்றில் முஸ்லிம் இளைஞரொருவர் காயமடைந்துள்ளார்.

அப்பகுதியிலுள்ள வீடொன்றின் கூரை மேல் சந்தேகத்திற்கு இடமான நபரொருவரின் நடமாட்டத்தை அவதானித்து திருடன்... திருடன்... எனக் கூக்குரலிட்ட போது அந் நபரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் முஸ்லிம் இளைஞர் காயமடைந்துள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தப்பியோடியுள்ளார்.

# பொலித்தீனுக்குப் பதிலாக பனைசார் பொருட்கள்

# பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் ஆராய்வு

வடதமிழீழத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பனைசார் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் பொலித்தீன் பாவனையைக் குறைக்கும் முகமாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியக மண்டபத்தில் சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

நடுவப்பணியகத் திட்டமிடல் ஆலோசகர் தலைமையில் இடம் பெற்ற சந்திப்பில் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர்கள், பனை அபிவிருத்திச்சபை போதனாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடதமிழீழத்தில் பொலித்தீன் பாவனைக்கு ஈடாக பனைசார் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பாக இம்மாத இறுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் உற்பத்தியாளர்களுக்கிடையிலான போட்டி ஒன்றை நடாத்தி அதனூடாக உற்பத்திப் பொருட்களை செய்வதில் அவர்களை ஊக்குவித்து முதல் மூன்று இடங்களைப் பெறும் கைப் பணிப்பொருட்களுக்கு பரிசில்களும் வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (46)

# புதுக்குடியிருப்பில் கடும்மழையினால்

# வணிக நிலையங்களுள் வெள்ளம் புகுந்தது

புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்றுக்காலை சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக பெய்த கடும் மழைகாரணமாக பொதுமக்களும் வணிகர்களும் பெரும் இழப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ் விழப்புக்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் சீரான வடிகாலின்மையும், நீரோடிகள் பொருத்தமற்றதாக அமைந்துள்ளமையும் மேலும் வடிவாய்க்கால்களில் கழிவுகள் கொட்டப்பட்டிருந்தமையும் ஆகும்.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் அமைந்திருந்த பல வணிக நிலையங்களிற்குள் வெள்ளம் சென்றுள்ளதால் பெரும் இழப்புக்களை வணிகர்கள் சந்தித்துள்ளனர். இதனை புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் செ.தயானந்தாவும் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தனும் பார்வையிட்டனர்.

இதேவேளை தமக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து வணி கர்கள் உதவி அரசாங்க அதிபரின் கவனத்திற்குகொண்டு சென்றுள்ளனர்.

மழைகாலம் தொடங்கியுள்ளதால் வடிவாய்க்கால்களில் கழிவுப் பொருட்களை போடவேண்டாம் எனப் பொதுமக்களை புதுக்குடியிருப்பு உதவி அரசஅதிபர் கேட்டுள்ளார். (08)

# பெரும்போகச் செய்கை குறித்து

# கமக்கார அமைப்புக்களுடன் சந்திப்பு

கமக்கார அமைப்புக்களுக்கான பெரும்போக பயிர்ச்செய்கை மற்றும் கால் நடை அபிவிருத்தி தொடர்பான சந்திப்பு நெடுங்கேணி கிராமத்திலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வவுனியா மாவட்ட பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் 2005, 2006 ஆம் ஆண்டு மேட்டு நிலத்தில் மானாவாரியாக மறுவகை பயிர்செய்கை மேற்கொள்வது பற்றியும், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் மேலும் பல முக்கிய விடயங்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (46)

# வவுனியா பிரதேச செயலக

# முதியோர், சிறுவர்தினவிழா

(வவுனியாசெய்தியாளர்)

வவுனியாப் பிரதேச செயலகம் ஏற்பாடுசெய்த முதியோர், சிறுவர் தினவிழா வவுனியா நகரசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

வவுனியாப் பிரதேச செயலர் செல்வி. வி.த.துரைச்சாமி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாண



படம்:-சுபாஸ்கரன்

புனர்வாழ்வு, புனரமைப்பு சமூகநலன்அமைச்சின் செயலாளர் வி.செ. சுவாமிநாதன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

காலை, மாலை என நடைபெற்ற இரு அமர்வு நிகழ்வுகளிலும் காலை அமர்வில் முதியோருக்கான வேகநடை, முட்டிஉடைத்தல், ஊசிநூல் கோர்த்தல், அப்பிள்பழம் சாப்பிடுதல், பலூன்உடைத்தல் 75 மீற்றர் ஓட்டப்போட்டி, சங்கீதக்கதிரை ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

மாலை அமர்வில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த முதியோர் சங்கங்களைக் கௌரவித்தல்,முதியோர் கௌரவிப்பு, சிறுவர்களுக்கு வங்கி வைப்புப் புத்தகம் வழங்கல் ஆகிய நிகழ்வுகளுடன் கலை நிகழ்வுகளும், விருந்தினர் உரைகளும் இடம்பெற்றன. (10)

# மன்னாரில் போலி நாணயத்தாள்கள்

# மீண்டும் புழக்கத்தில் வந்தன

(மன்னார்)

மன்னாரில் போலி நாணயத் தாள்கள் மீண்டும் புழக்கத்துக்கு வந்துள்ளன.

கடந்த புதன்கிழமை புடவைக் கடையிலும், மீன் சந்தையிலும், போலி ஆயிரம் ரூபா ஐந்நூறு ரூபாய் தாள்கள் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளதோடு இது வியாபாரிகளின் மத்தியில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

இப் போலி நாயணத்தாள்கள் தென் பகுதியிலிருந்து வரும் மீன் வியாபாரிகளிடமிருந்தே கிடைக்கப் பெற்றதாகவும், அப்பகுதி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (18)

# மன்னார் பெண்கள் கல்லூரியில்

# வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு

மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசியக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் கடந்த புதன்கிழமை மாலை மேற்படி கல்லூரியின் முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பரிசில்களையும் ,சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டிக் கௌரவித்தார். (18)


## கரைதுறைப் பற்று ப.நோ.கூ.சங்கம்
முல்லைத்தீவு

**வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்**

கரைதுறைப்பற்று ப.நோ.கூ சங்கமானது கிளைகளிற்கான வாக்காளர் இடாப்பு கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் கிளை வாக்காளர் இடாப்பு ஆட்சேபனை இருப்பின் 20.11.2005 இற்கு முன்னர் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

(சி.13309) செயலாளர்.

**வரிவிளம்பரம்**

## காணி விற்பனைக்கு

பரவிப்பாஞ்சான் 2ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சில்லறை ப.நோ.கூ.சங்கத்தில் இருந்து 50 யார் தொலைவில் அமைந்துள்ள 4 பரப்பு, 3 பேச் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
இராமசாமி புவனேந்திரன் J.P,
கோபிகடை, கரடிப் போக்குச்சந்தி,
கிளிநொச்சி. (6907)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணினி சார்ந்த
**Hardware Technology**
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகளுக்கு:- வின்நெற் கணினி பயிற்சி நிலையம், டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி.13074)

## KEN இலங்கையின் முதல்தர விநியோகஸ்தர்கள்

**பிள்ளையார் பல்பொருள் உதிரிகள் வாணிபம்**



இல,308 கந்தசுவாமி கோவில் முன்பாக,
பிரதானசாலை, கிளிநொச்சி.
துணுக்காய் சாலை, மல்லாவி.
தொ.பே.021 2285945

5ஆம், 6ஆம்,7ஆம் திகதிகளில் KEN மின்கருவிகள் இலவசமாகப் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.
...ன்10 %கழிவு வழங்கப்படும்.


## சாவு அறிவித்தல்

### திருமதி சதாசிவம் தவமணி

நவாலியைப் பிறப்பிடமாகவும், வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் தவமணி நேற்று (05.11.2005) காலமானார். அன்னார் காலஞ்சென்ற மருதப்பு-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் திரு. கந்தையா சதாசிவத்தின் அன்பு மனைவியும், திருமதி இரகுநாதன் சொர்ணலக்சுமி(கனடா), திரு. சதாசிவம் கனகசபாபதி (சபா) (உரிமையாளர் சிறி கருமாரி நகையகம் 206,5 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்), திரு. சதாசிவம் கனகலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அன்னாரது 127, இராமலிங்கம் வீதி, முடமாவடி,நல்லூரில் உள்ளஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.127,இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
நல்லூர்

தகவல்:
ச.கனகசபாபதி (சபா)
மகன்,
சிறிகருமாரி நகையகம்,
யாழ்ப்பாணம்.

(சி.13218)

# திட்டமிட்டபடி அமெரிக்காவுடன் கூட்டுப்பயிற்சி இந்திய பாதுகாப்பு அமைச்சர் தகவல்

(புதுடில்லி)

**இடதுசாரிக் கட்சிகளின் எதிர்ப்புக் கண்டன ஆர்ப்பாட்டங் களைப்பற்றி கவலைப்படாமல் திட்டமிட்டபடி நவம்பர் ஏழாம் திகதியிலிருந்து இந்திய அமெரிக்க போர் விமானங்களின் கூட்டுப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.**

பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடந்த பாதுகாப்பு விபரங்களுக்கான அமைச்சரவைக் குழுக்கூட்டத்தில் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்தத் தகவலை இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி செய்தியாளர்களிடம் கூறினார். எல்லாப் பிரச்சினைகளுக்கும் சுமுகமான விடை காணப்பட்டுவிட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா மற்றும் மார்க்சிஸ்டு கட்சியின் மூத்த தலைவர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. அப்பொழுது இந்திய- அமெரிக்க போர் விமானங் களின் கூட்டுப்பயிற்சிகள் இடைஞ்சல் இல்லாமல் நடைபெற தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மாநில அரசு செய்ய வேண்டும் என்று மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவிடம் கோரப்பட்டது. அதனையொட்டி பிரச்சினைகளுக்கு சிக்கலின்றி முடிவுகள் காணப்பட்டன.

இந்திய, அமெரிக்க போர் விமானங்களின் கூட்டுப் பயிற்சி என்பது புதிதல்ல. கடந்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளாக இப்பயிற்சி நடைபெற்று வருகின்றன என்றும் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

## கலவரம் தொடர்கிறது

பிரான்ஸ் நாட்டுத்தலைநகர் பரிசில் குடியேறியுள்ள வடஆபிரிக்க இளைஞர்களின் கலவரம் நேற்று வரை தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக அங்கு பெரும் சொத்தழிவுகள் இடம்பெற்றிருக்கின்றன.

தமது உரிமையை வலியுறுத்தியே அவ் இளைஞர்கள் கலரவரங்களில் ஈடுபடுவதாகச் சொல்லப்பட்டாலும், இக் கலவரத்தின் பின்னணியில் போதைப் பொருட் கும்பல்கள் இருப்பதாக பிரான்ஸ் அரசு தெரிவிக்கின்றது



ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு பூகம்பத்தால் பலியானவர்களுக்காக பாகிஸ்தானில் சிறப்புப் பிரார்த்தனை இடம்பெற்றது. இப் பிரார்த்தனையில் தம் இறந்துபோன உறவுகளுக்காக பிரார்த்திக்கும் பாகிஸ்தான் சிறுமி.



பறவைக்காய்ச்சல் பீதியால் தென் கொரியாவில் கோழி இறைச்சி விற்பனை பெரு வீழ்ச்சியைக் கண்டிருக்கும் நிலையில் மீண்டும் கோழி இறைச்சிக்கான கேள்வியை அதிகரிக்கும் நோக்கில் பல உத்திகள் கையாளப்பட்டு வருகின்றன. இங்கே தென்கொரிய உணவு விடுதி ஒன்றில் கோழிக்கறியைப் பல விதங்களில் சமைத்து ருசி பார்க்கின்றனர் மருத்துவர்கள்.

# எப்–16 ரக விமானங்கள் வாங்கும் திட்டம் முடிவை மாற்றுகிறது பாகிஸ்தான் அரசு

(இஸ்லாமபாத்)

அமெரிக்காவிடம் இருந்து வாங்கவுள்ள எப்-16 ரக போர் விமானங்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ள பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது. பூகம்ப நிவாரணத்துக்கான சர்வதேச நிவாரண நிதியுதவிகள் குறைந்துவரும் வேளையில் படைக்கருவிகள் வாங்குவதில் பணம் வீணடிக்கப்படுகிறது என்று விமர்சனங்கள் எழுந்துள்ளதை அடுத்து அதிபர் முஷாரப் இந்த முடிவுக்கு வந்துள்ளார் எனத் தெரிகிறது.

அமெரிக்காவிடம் இருந்து 75 எப்-16 ரக போர் விமானங்களை வாங்குவதாக ஏற்கனவே முடிவாகியுள்ளது. இந்நிலையில், ஒக்ரோபர் எட்டில் ஏற்பட்ட பூகம்பம் பாக்., அரசை நிதி நெருக்கடிக்கு உள்ளாக்கியது. வெளிநாடுகளில் இருந்து வரும் நிவாரண நிதிகள் கூட தற்போது குறைந்து வருகிறது. அதனால் பாக்., அரசு பாதுகாப்புச் செலவைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென விமர்சனங்கள் எழுந்தன. பாகிஸ் தானில் வெளியாகும் 'டான்' பத்திரிகைக்கு இது தொடர்பான கேள்விக்குப் பதில் அளித்த முஷாரப், "அமெரிக்காவிடம் இருந்து 75 எப்-16 ரக விமானங்கள் வாங்க திட்டமிட்டிருந்தோம். தற்போது அந்த எண்ணிக்கை குறைக் கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார். எத்தனை விமானங்கள் வாங்கப்படும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

இது குறித்து இராணுவ அதிகாரிகள் கூறு கையில், "தற்போது இரண்டு சாத்தியக்கூறுகள் தான் உள்ளன. ஒன்று, அமெரிக்காவிடம் இருந்து பெறப்படும் 75 போர் விமானங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது. இல்லை யெனில், அதே ரகத்தின் பழைய வடிவமைப்பு விமானங்கள் பெல்ஜியத்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும்" என்றனர்.

# விண்வெளிக்கு செல்லும் நான்காவது சுற்றுலா பயணி

(டோக்கியோ)

அமெரிக்கா, ரஷ்யா உட்பட பல்வேறு நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்தை அமைத்துள்ளன. இந்த ஆய்வுகூடத்துக்கு அவ்வப்போது விண்கலங்கள் மூலம் விண்வெளி நிபுணர்களையும் தேவையான தளபாடங்களையும் அனுப்பி வருகிறார்கள்.

இந்த ஆய்வு கூடப் பணிகளுக்கு ஆகும் செலவுகளைச் சமாளிக்க அவ்வப்போது விண்கலம் செல்லும் போது சுற்றுலாப் பயணிகளையும் கூடவே அழைத்துச் செல்கிறது. கோடிக்கணக்கில் இதற்காக அந்த விண்வெளி சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து பணமும் வசூலிக்கப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரர் உட்பட இதுவரை மூன்று சுற்றுலாப் பயணிகள் விண்வெளிக்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர். விண்வெளிக்குச் செல்லவிருக்கும் நான்காவது சுற்றுலாப்பயணி ஒரு ஜப்பானியர் ஓவியரான இந்தக் கோடீஸ்வரர் பெயர் டெய்சூகி எனோமோட்டோ. (வயது-34) இதற்காக அவர் இரண்டு கோடி டொலர் பணம் கொடுக்கிறார். அடுத்த ஆண்டு இவர் சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்துக்கு விண்கலம் செல்லும் போது விண்வெளி நிபுணர்களுடன் இவரும் உடன் செல்கிறார்.



நேற்று முன்தினம் இடம்பெற்ற ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமிற்கு மலர்ச் செண்டு கொடுத்து வாழ்த்துத் தெரிவிக்கின்றார் பிரதமர் மன்மோகன்சிங்.



பிரான்ஸ் நாட்டின் அல்நே சூஸ் பாய்ஸ் நகரில் கடந்த ஒரு வாரமாக கலவரம் நடந்து வருகிறது. இங்குள்ள எண்ணெய்க் கிடங்கொன்றை கலவரக்காரர்கள் தீ வைத்துக் கொளுத்தியதால் வானளாவ தீ எரிகிறது. இதனை முதலாவது படத்தில் காணலாம். அடுத்த படத்தில் பரிஸ் நகரின் மேற்குப் பகுதியில் உள்ள ட்ரெ பெஸ் பேருந்துகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ள நிலையையும் காணலாம். இக் கலவரத்தில் 150 இற்கு மேற்பட்ட கார்கள் எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க வர்த்தக கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்க மாநிலங்களின் தலைவர்களின் உச்சி மாநாடு ஆர்ஜென்டீனாவில் ஆரம்பமாகியுள்ள நிலையில் கட்டுப்பாடற்ற வர்த்தகக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக் கணக்கானோர் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளார்கள். இந்த எதிர்ப்பு வன் முறையில் முடிந்துள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளச்சென்ற தலைவர்களில் அமெரிக்க சனாதிபதி புஷ்ஷும் ஒருவராவார். சுதந்திர வர்த்தக வலயம் தொடர்பாக மீண்டும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கும் திட்டம் தொடர்பாக இவ் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

வெனிசுலாவின் தலைவர் ஆர்ப்பாட்டக் காரர்கள் மத்தியில் உரையாற்றுகையில்; அமெரிக்காவின் சுதந்திர வர்த்தக வலையமைப்பைத் தோற்கடிக்கச் செய்து வர்த்தக வலையமைப்பையும் அதன் ஏகாதிபத்தியத்தையும் தோற்கடிக்கப் போவதாகக் கூறினார். அமெரிக்க ஆதரவிலான கட்டுப்பாடற்ற சந்தைக் கொள்கைகள் இலட்சக்கணக்கான மக்களை இந்தப் பிராந்தியத்தில் வறுமை நிலைக்குத் தள்ளிவிடும் என்பதே ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆதங்கமாகும்.

# பாகிஸ்தானில் படகு கவிழ்ந்ததில் 75 பேர் நீரில் மூழ்கிப் பலி

(கராச்சி)

பாகிஸ்தானில் இண்டஸ் நதியில் படகு கவிழ்ந்ததில் 75 பேர் மூழ்கி இறந்தனர். இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; கராச்சிக்கு கிழக்கே 70 கி.மீ தொலைவில் உள்ள தட்டா என்ற இடத்திற்கு அருகே இண்டஸ் நதியில் சென்று கொண்டிருந்த படகு ஒன்று நேற்று முன்தினம் அதிக பளு காரணமாகக் கவிழ்ந்ததில் 75 பேர் மூழ்கி இறந்ததாக கடற்படை செய்தித் தொடர்பாளர் சல்மான் அலி தெரிவித்தார்.

வழிபாட்டுத் தலத்துக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற போது படகு கவிழ்ந்ததாக கராச்சி மாகாண செய்தித் தொடர்பாளர் சலாவுதீன் ஹைதர் கூறினார்.

# எதியோப்பியா தலைநகரில் வன்முறைகள் தொடர்கின்றன

எதியோப்பியாவின் தலைநகரில் இந்த வாரம் 40 இற்கும் அதிகமானோரைப் பலிகொண்ட வன்முறை மோதல்கள் பிறநகரங்களுக்கும் பரவியுள்ளது.

எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் நான்காவது நாளாக இடம்பெற்ற மோதல்களினாலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிகிறது.

தேர்தலில் மோசடி இடம் பெற்றதாகக் கூறி எதிர்க்கட்சியினர் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை இந்த வாரமும் தொடர்ந்து நடத்தியுள்ளனர்.

எதியோப்பியாவில் மே மாதத்தில் நடை பெற்ற தேர்தலிற்குப் பின்னர் இடம்பெற்ற குழப்பங்களில் இது மிகவும் மோசமானதாக அறிவிக் கப்பட்டுள்ளது. அப்போது சுமார் 36 பேர் பலியானதுடன் நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

## முத்திரையிடல்

புதுக்குடியிருப்பு பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரி பார்த்து முத்திரையிடும் செயற்பாடு நேற்றுமுன்தினம் முதல் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் சாலையில் அமைந்துள்ள நிறுத்தலளவைப்பிரிவு செயலகத்தில் நடைபெற்று வருகின்றது. நிறுத்தலளவைக் கருவிகளைப் குறித்த நாளில் முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அத்தியாவசிய சேவைகள் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் எதிர்வரும் எட்டாம் திகதியன்று பிற்பகல் இரண்டு மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட சகலரையும் அன்றைய கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

# தேசியத்தலைவரின் பிறந்த நாளன்று பிறக்கும் குழந்தைகளுக்கு சேமிப்புக் கணக்கு!

## – திருமலையில் மாணவர் அமைப்பு ஏற்பாடு

(திருமலை)

தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் 51ஆவது பிறந்த தினத்தை ஒட்டி திருகோண மலை மாவட்டத்தில் நவம்பர் 25 ஆம் திகதி நள்ளிரவிலிருந்து நவம்பர் 26 நள்ளிரவு காலத்தினுள் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் பெயரிலும் புதிதாக வங்கிச் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்படும் என்றும் பிறந்த தின நினைவுப் பரிசில்களும் ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் திருகோண மலை மாவட்டத் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி இவ்வறிவிப்பை விடுத்திருக்கின்றார். பிறக்கும் குழந்தைகள் பற்றிய விபரங்களை மாவட்ட வைத்தியசாலை, பிறப்புப் பதிவு அதிகாரி மற்றும் கிராம சேவையாளர் மூலம் உறுதி செய்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தமிழீழ மாணவர் அமைப்பின் மாவட்டப் பொறுப்பாளர் புரட்சி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - மாவீரர் தின நிகழ்வுகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த வியாழக்கிழமை ஈச்சிலம்பற்று மற்றும் சேனையூர் ஆகிய இடங்களில் இடம் பெற்றன. ஈச்சிலம்பற்றுக் கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், தேசிய எழுச்சிப் பேரவை திருமலை மாவட்டப் பொறுப்பாளர் குட்டி ஆகியோர் பங்கு பற்றினர். சேனையூர் கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் பங்குபற்றினார். ஈச்சிலம்பற்று பிரதேச மாவீரர் தின நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதற்கு நாகராஜாவின் தலைமையிலான குழுவும் சேனையூர் பிரதேசத்துக்கு எஸ்.செல்வரத்தினம் தலைமையிலான குழுவும் நியமிக்கப்பட்டன. (25)

## முன்னோடிக் கருத்தரங்கு

கிளிநொச்சி கல்விவலயப் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் ஒன்பதாம் திகதி காலை 08.30.மணி முதல் பிற்பகல் 04.00 மணிவரை கிளி/ கலாச்சார மண்டபத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கில் அதிபர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

## நீர் விநியோகம் ஆரம்பம்

கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் நீர் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. மேற்படி நீர் விநியோகத்தினை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கிளிநொச்சி நீர் விநியோகத் திட்ட பொறுப்பதிகாரி காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு நீர் விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளு மாறு கிளி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

# மழைகால நோய்களைக் கட்டுப்படுத்த மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட முயற்சி

## தாயகம் தழுவிய ரீதியில் சுகாதார சேவை நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

***மழைக்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டி வருமுன் காக்கும் நடவடிக்கைகளை தமிழீழ சுகாதார சேவையினர் முன்னெடுத்து வருகின்றனர். இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பயனடைந்து வருகின்றனர்.***

"மழைக்காலங்களில் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு" எனும் தலைப்பில் மழைக் கால அவசர சுகாதாரக்கருத்தரங்குகள் தமிழீழ சுகாதார சேவையினரால் தாயக பிரதேசமெங்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ சுகாதார சேவையினராலும், திலீபன் மருத்துவ சேவையினராலும், சுகாதார திணைக்களத்தினராலும் தாயகத்தில் 300 கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

கடந்த நான்காம் திகதிவரை ஐம்பது கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளனடன் இதில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் வரையான டிப்போ வீதியினை தார்போட்டு அகலமாக்கும் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. மக்கள் போக்குவரத்து கூடிய வீதியென்பதால் இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:- சோதி)

# மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் கட்டைபறிச்சானில் தடுத்துவைப்பு!

(திருமலை)

திருகோணமலை மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடந்த வியாழனன்று சந்திப்பு ஒன்று சம்பூரில் நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காகச் சென்ற மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் எவ்வித காரணமும் இன்றி சுமார் இரு மணிநேரம் கட்டைபறிச்சான் இராணுவச் சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இது விடயமாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதன் பின்னர் சங்கத்தின் பிரதிநிதிகள் சம்பூருக்கு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் மீண்டும் சந்திப்பு முடிந்து திரும்பி வருவதற்கும் அனுமதிக்கப்பட்டனர். இந்த மாதம் நடைபெறவிருக்கும் மாவீரர் நாள் நிகழ்வுகள் சம்பந்தமாக கலந்தாலோசிப்பதற்காக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் சம்பூருக்குச் சென்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம். இராணுவத் தளபதி வசந்தன், அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோர் பங்கு கொண்டனர். (32)

## காலாவதியான 616 மூடை கோதுமை மா அழிப்பு

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காலாவதியான 616 மூடை கோதுமை மா பொதுச்சுகாதார சேவை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காகவே இவ்வாறு களஞ்சியப் படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதி மக்களுக்கு வவுனியாவில் தற்காப்புப் பயிற்சி

வவுனியா மாவட்ட இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் உள்ள மக்களுக்கான, தற்காப்புப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் இரண்டாம் கட்டமாக பயிற்சிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

இவ்வகையில் நவநீதன் பயிற்சிப் பாசறையில் முதல் அணியினருக்கான பயிற்சிகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானம் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து பயிற்சிகளை ஆரம்பித்து வைத்தார். இரண்டாவது அணியினருக்கான தற்காப்புப் பயிற்சிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதில் அரச திணைக்கள ஊழியர்கள் பங்கெடுக்கின்றனர். இதனை மாணவர் அமைப்புப் பொறுப் பாளர் நளன் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆரம்பித்து வைத்தார்.



தொடர்ந்து வவுனியா மாவட்ட மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் நடைபெறுமென வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## – வவுனியா மாவட்ட –

# செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன ஆண்டு நிறைவு விழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் நான்காம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூக பொருளாதார சூழல் அபிவிருத்தியாளர் க.விஜயரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மேலதிக அரச அதிபர் திருமதி பீஎஸ்எம்.சார்ள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம் ஆகியோரும் வவுனியா வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தலைவர் சுப்பிரமணியம், வவுனியா நகரசபை முன்னாள் செயலாளர் வி.எஸ்.எஸ்.செல்வராசா, வவுனியா சமூக சேவை உத்தியோகத்தர் ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்து செவிப்புலன் வலுவற்றவர்களும் கலந்துகொள்வார்கள். (10)



திருவள்ளுவர் விழாவையொட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற பண்பாட்டுப் பேரணியில் கலந்துகொண்ட தமிழ் மன்னர்களின் அணிவகுப்பையும் திருவள்ளுவரின் உருவப்படம் தாங்கிய பவனியையும் படத்தில் காணலாம். (படம்:-இ.சசி)

# குடாநாட்டில் கம்பி வலைகளுக்குள் பாதுகாப்புத் தேடும் படையினர்!

(நல்லூர்)

**யாழ்.மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக இராணுவ பொலிஸ் காவலரண்கள் மீது இனம் தெரியாதவர்களின் கைக்குண்டுத்தாக்குதல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் இராணுவத்தினரும் பொலிசாரும் தமது முகாம்கள் மற்றும் காவலரண்கள் அமைந்துள்ள பகுதிகளில் கம்பி வலைகளை அமைக்கும் நடவடிக்கைகளை துரிதப் படுத்தியுள்ளனர்.**

இத்தகைய தாக்குதல்கள் காரணமாக இது வரையில் ஒரு பொலிசார் இறந்துள்ளதுடன் பத்துக்கும் மேற்பட்ட படையினர் பலத்த காயங் களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் போதனாவைத் தியசாலை மற்றும் பலாலி இராணுவ வைத்திய சாலையிலும் சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

இதற்காக அனைத்து காவலரண்களும் கம்பி வலைகள் கொண்டு சுற்றிவர அடைக் கப்படுவதுடன் உருமறைப்புக்களும் மேற் கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது காவலரண்களுக்கு அருகில் நின்று கதைப்பதற்கோ அன்றி வாகனங்களை நிறுத்துவதற்கோ படையினர் யாரையும் அனுமதிப்பதில்லையென்பதும் குறிப்பிடத்தக் கதாகும்.

கடந்த வாரம் முதல் பரவலாக கைக் குண்டுத் தாக்குதல்கள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் இடம்பெற்றுள்ளமையால் வாக னங்களில் செல்லும் படையினரும் கூட தமது துப்பாக்கிகளை சுடு நிலையில் கொண்டு செல்வதினால் பொதுமக்கள் இதனையிட்டு பலத்த அச்சமடைந்துள்ளார்கள்.

இராணுவத்தினரும் பொலிசாரும் பொது மக்கள் கூடும் இடங்களான சந்தைகள், வைத்திய சாலைகள் மற்றும் பொது இடங்களிலும் கூட துப்பாக்கிகளை சுடு நிலையிலேயே வைத்திருப்பதனால் ஏதாவது சம்பவம் இடம் பெற்று இவர்கள் பதற்றப் பட்டால் கூட துப்பாக்கிகள் பொதுமக்களின் உயிரைக் குடிக்கும் அபாயம் காணப்படுவதாக பொதுமக்கள் கூறுகின்றார்கள்.

கடந்த காலங்களில் இத்தகைய நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளமையை அவர்கள் நினைவு கூருவதுடன் இவர்கள் பொது மக்கள் கூடும் இடங்களில் ஆயுதங்களுடன் நடமாடாது தவிர்த்துக் கொள்வது பொது மக்களின் உயிர் களுக்குப் பாதுகாப்பெனவும் தெரிவிக்கின் றார்கள் . (41)

## வின்சர் திரையரங்கச் சந்தியில் கைக்குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் வின்சர் திரையரங்கச் சந்தியில் உள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீது கைக்குண்டு வீசுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை மூன்று மணி யளவில் நடத்தப்பட்ட இக்கைக்குண்டு வீசுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து நக ரில் உள்ள வீதிகள் எங்கும் பெருமளவு படையினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டு தேடுதலில் ஈடுபடுத்தப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உந்துருளியில் வந்த இனம்தெரியாதோரே கைக்குண்டு வீச்சை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களால் வீசப்பட்ட கைக்குண்டு காவலரண் மீது வீழ்ந்து வெடித்தபோதும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்று இராணுவத் தரப்பு கூறுகிறது.

எனினும் குண்டுத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் அவர் அவசர அவசரமாக அருகில் உள்ள 512ஆவது படைத் தலைமையகத்துக்கு வாகனம் ஒன்றில் எடுத் துச் செல்லப்பட்டதாகவும் சம்பவ இடத்தில் நின்றிருந்தோர் கூறினர். (33,37,28,கீ,41)

- தொடரும் பருவமழை -

## யாழ்.போதனாவைத்தியசாலையில் குடைபிடிக்கும் அவல நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்யும் தொடர் மழை காரணமாக வைத்தியசாலைக்குச் செல்லும் பொது மக்கள் வைத்திய சாலைக்குள்ளும் குடைபிடித்துத் திரிகின்ற அவல நிலைமை காணப்படுகின்றது.கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வைத்திய சாலையின் பல கட்டடங்கள் சேதமடைந்த போதிலும் இவைகள் உரிய முறையில் திருத்தப்படவில்லை. அத்துடன் நோயாளிகள் மற்றும் பொது மக்கள்நடமாடும் நடைபாதைகளும் கூட சீரான முறையில் திருத்தப் படவில்லை.இவை காரணமாக மழை பெய்யத் தொடங்கியதும் மழை நீர் வைத்திய சாலையெங்கும் பரவுகின்றது. இதனால் பொது மக்களும் சரி வைத்திய சாலை ஊழியர்களும் சரி கைகளில் குடைகளுடனேயே நடமாட வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.. (41)

## பயணிகளுக்கு இடையூறு விளைவித்து வந்த குழுவினர் மீது சித்தங்கேணியில் தாக்குதல்

(வலிகாமம்)

சித்தங்கேணிச் சந்திப் பகுதியில் குழுமி நின்றிருந்த இளைஞர் குழு ஒன்றின் மீது சமூக உணர்வுடைய இளைஞர்களால் தாக்குதலை மேற் கொண்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வியாழனன்று இரவு ஏழு மணியளவில் இடம்பெற் றுள்ளது.

சித்தங்கேணிச் சந்திப் பகுதியில் தினமும் குழுமி நிற்கும் இளைஞர் குழுவினர் போக்குவரத்தில் ஈடுபடு வோருக்கு பெருஞ்சிரமங்களையும், அசௌகரியங்களையும் ஏற்படுத்தி வந்தனர் என்று மக்கள் தெரிவிக்கின் றனர்.

இதையடுத்து, வீதிகளின் சந்திப் பகுதிகளில் இளைஞர் கூடி நிற் பதைத் தவிர்க்குமாறு பல தடவைகள் சமூக உணர்வுடைய இளைஞர்களால் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

எச்சரிக்கைகளையும் பொருட் படுத்தாது வழமைபோன்று சந்தியில் நின்றிருந்த இளைஞர் குழு மீதே கொட்டன்களாலும் பொல்லுகளாலும் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் ஐந்து உந்துருளிகளில் வந்த சமூக உணர்வுடைய இளைஞர்களே இவ்வாறு கொட்டன் களாலும் பொல்லுகளாலும் தாக்குதல் நடத்தி சம்பந்தப்பட்ட இளைஞர் குழுவினரைக் கலைத்ததாக நேரில் பார்த்தோர் தெரிவித்தனர். (37)

## உலக நாடுகளுக்கு என்னால் செல்ல முடிகின்றது நாட்டின் சில பகுதிகளுக்கு செல்ல முடியவில்லை

யாழ். இல் படையினர் மத்தியில் மகிந்த

நாட்டின் பிரதமராக உலக நாடுகளுக்கெல்லாம் என்னால் செல்ல முடிகின்றது.ஆனால் எனது நாட்டின் சில பகுதிகளுக்கு செல்ல முடியவில்லை என்று சிறிலங்கா பிரதமரும் சுதந்திரக் கட்சி சனாதிபதி வேட் பாளருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்த மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பலாலி விமானத் தளத்துக்கு வந்திறங்கிய மகிந்த காலை உணவை இராணுவத்தினருடன் சேர்ந்து உண்டார். அதன் பின்னர் இராணுவ வைத்தியசாலைக்குச் சென்றார்.

சிறிலங்காவின் கடற்படைத் தளங்களையும் முகாம் களையும், பார்வையிட்ட மகிந்த ராஜபக்ஷ தாம் சனாதி பதியாக தேர்வு செய்யப்பட்டால் மேற்கொள்ள உள்ள செயற்றிட்டங்களை இராணுவத்தினரிடம் விளக்கினார்.

"நாட்டின் பிரதமராக லண்டன் மற்றும் அமெரிக்கா போன்ற உலக நாடுகளுக்கு எல்லாம் என்னால் போக முடிகிறது. ஆனால் என் நாட்டின் சில பகுதிகளுக்கு என்னால் செல்ல முடியவில்லை" என்றும் அவர்களிடம் மகிந்த கூறினார்.

"யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. நாம் யுத்தத்திற்கு எதிரானவர்கள்" என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

இலங்கையில் தமிழர்களின் அமைதிக்கான சனநாயகத்திற்கான குரல் ஒலிக்க முடியாத அளவுக்குத் துப்பாக்கிச் சத்தம் மேலோங்கி இருக்கிறது. துப்பாக்கிச் சத்தத்தினால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் - மூழ்கடிக் கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் குரல் எழும்புவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காகவே எதிர்வரும் 18ஆம் திகதி நான் சனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளேன் என அவர் மேலும் கூறினார்.

## சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் யாழ். இற்கு விஜயம்!

சிறிலங்காவின் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கடந்த வியாழனன்று யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்று பிற்பகல் வான்படை வானூர்தி மூலம் பலாலியை சென்ற டைந்த அவர், அங்கு யாழ் குடாநாட் டில் உள்ள பொலிஸ் அதிகாரிகளு டனான மாநாட்டில் கலந்துகொண் டார். யாழ். குடாவின் தற்போதைய பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பில் இந்த மாநாட்டின் போது பொலிஸ் மா அதிபர் கேட்டறிந்ததாக தெரிய வருகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ யாழ். குடா வருகையி னால் பாதுகாப்பு ஒழுங்குகள் குறித்து ஆராய்வதற்கே சந்திரா பெர்னாண்டோ யாழ் வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## கட்டுரை, பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 126 ஆவது குருபூசை தினத்தை ஒட்டி நடாத்தும் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி என்பவற்றுக்கு பங்கு பற்ற விரும்பும் பாடசாலை மாணவர்க ளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடை பெறும் மேற்படி போட்டிக்கான விண்ணப் பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு வண்ணா அனுப்பிவைக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது. போட்டிகள் எதிர்வரும் 15 ஆம்திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதில் பெற்றோர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் அதிகள வில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு நன் கொடைகளைக் கேட்பதினால் பெற்றோர்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பிட்ட பாடசாலைகள் தமது அனுமதிக் கட்டணமாக சுமார் முப்பதாயிரம் ரூபாக்கள் வரையில் வாங்கிக் கொண்டு பிள்ளைகளைச் சேர்க்கின்றார்கள்.

இத்தகைய நிலைமைகள் காரணமாக அதிகமான பெற்றோர்களின் பிள்ளைகள் பாட சாலைகளில் இடம் கிடையாது கஷ்ரப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக இலங் கையில் இலவசக் கல்வி என்று கூறப்படுகின்ற போதிலும் கஷ்ரப்பட்டவர்களின் கல்வி நிலை மையென்பது கஷ்ரமாகவே இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை கள் ஆணைக்குழு முதல் கல்வித் திணைக் களம் வரை பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது எனவும் அப்படியாராவது கட்டணம் அறவிட்டால் தமக்கு அறியத்தரலாம் எனவும் அறிவித்துள் ளார்கள். உண்மையில் பாடசாலைச் சங்கங் களின் கணக்குகளை பார்வையிட்டால் எவ்வளவு தொகையை பாடசாலைகள் அனு மதிக்கட்டணமாக அறவிட்டுள்ளார்கள் என்பது தெரியவரும். (41)

- இழப்பீடு வழங்காததற்கு ஆட்சேபம் தெரிவித்து -

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் பருத்தித்துறை பிரதேச செயலகம் முன் ஆர்ப்பாட்டம்

சுனாமியால் பெரும் பாதிப்புக்குள்ளான வடமராட்சி வடக்கு வர்த்தக சமூகம் தமது நியாயமான இழப்பீடுகள் எதனையும் அரசு வழங்காததற்கு ஆட்சேபம் தெரிவித்து வரும் பதினொராம் திகதி மாபெரும் கண்டன மறியல் போராட்டம் ஒன்றை பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக நடாத்தவுள்ளதாக சங்கத் தின் தலைவர் தெரிவித்துள்ளார். ஆழிப்பேரலை யால் பொருளாதாரத்தை இழந்து கடந்த பத்து மாதங்கள் கடந்துவிட்ட போதும் இதுவரை தமது வர்த்தகத்தை மீளமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காததை ஆட்சேபித்தே இப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெற்கிலே ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு அரசின் உதவிகள் குவிக்கப் பட்டிருப்பதாகவும் ஆனால் வடக்கிலோ, கிழக் கிலோ இந்த உதவித் திட்டங்களை மேற் கொள்வதில் அரசு பாரபட்சம் காட்டுவதாகவும் இப்போக்கை கண்டித்தே தாம் போராட்டத்தை மேற்கொள்ள இருப்பதாகவும் இது குறித்த கோரிக்கை அ.ங்கிய மகஜரும் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி இருப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (28)

## தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.கிளை இடமாற்றம்

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணக் கிளை இன்று காலை 8.47 மணிக்கு வைபவரீ தியாக புதிய கட்டடத்திற்கு இடம் மாற்றப்பட வுள்ளது.இலக்கம் 496,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப் பாணம் எனும் புதிய முகவரியில் ஆரம்பிக் கப்படும் இவ்வங்கியில் இன்றைய தினம் வைப்புக களை மேற்கொள்பவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வில் வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கப்படுகின்றனர். (சே)

# யாருக்கு வாக்களித்தாலும்....

சிறிலங்காவின் சனாதிபதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதில் வாழ்க்கைச்செலவு மட்டுமல்ல இனப்பிரச்சினையும் முக்கியத்துவம் பெறத்தொடங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. உண்மையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கான தேர்தலைப் பொறுத்தமட்டில் இலங்கை முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கொள்ளப்படுவதனால், சிறுபான்மையின மக்களை புறக்கணித்த ஒருவர் சனாதிபதியாகிவிட முடியாத நிலையே காணப்படுகிறது.

அதாவது சிறிலங்கா மக்களின் வாக்குகள் இரு பிரதான வேட்பாளர்களிடையேயும் பங்கிடப்பட்டுவிட தீர்மானிக்கும் சக்திகளாக வாக்களிக்கும் சிறுபான்மையின மக்கள் மாறிவிட்டுள்ளனர். ஆனால் இந்நிலை சிங்கள இனவாதிகள் மத்தியில் பெரும் சங்கட நிலையை தோற்றுவித்தது.

அதாவது தேர்தலில் வெற்றிகொள்வதற்காக தமது தலைவர்கள் சிறுபான்மையினத் தலைவர்களின் பின்னால் ஓடுவது அவர்களுக்குப் பிடித்தமானதாக இல்லை. ஆனால் சிறுபான்மையினத் தலைவர்களும் இந்தவாய்ப்பை தேர்தலின் போது தமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளவும் ஆட்சிபீடமேறினால் அமைச்சுப் பதவிகளுக்குப் பேரம் பேசவுமே பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால் தேர்தல் காலத்தில் மாத்திரம் தமது மக்களே தீர்மானிக்கும் சக்திகள் எனக் கொக்கரித்து இனவாதிகளை உசுப்பிவிடத் தவறுவதில்லை.ஆனால் அந்தப் பலத்தைப் பயன்படுத்தி தமது மக்களின் விடிவைப் பெற்றுக்கொடுத்தார்களா? என்று பார்த்தால் இறுதியில் வெறுமைதான் எஞ்சும்.


ரணில்


மகிந்த


சந்திரிகா

எவ்வாறாயினும் இவ்வாறானதொரு நிலை அதாவது தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் சக்தி சிறுபான்மையின மக்களுக்கு இருப்பதை சகித்துக்கொள்ள முடியாத இனவாத சக்திகள் இம்முறை மகிந்த ராஜபக்ஷவின் பின்னால் அணிதிரண்டுள்ளமை வெளிப்படையாகவுள்ளது.

தனது கட்சிக்குள் மகிந்த ராஜபக்ஷவுக்குள்ள நெருக்குவாரமானது தற்போதைய களநிலவரம் இடம் கொடுக்காத நிலையிலும் மகிந்தராஜபக்ஷவை இந்த இனவாதிகளின் பக்கம் தள்ளியுள்ளது.அதாவது வெளிப்படையாக தன்னை இனவாதியாகக் காட்டிக் கொள்ள விரும்பாவிட்டாலும் வெளிப்படையாக இனவாதம் பேசுபவர்களுடன் கூட்டுச்சேர வைத்திருக்கிறது.

அதாவது இன்றுள்ள யதார்த்த நிலையானது ஜேவிபி போன்ற தீவிரவாதிகளுடன் கூட்டுச்சேர்வதை அனுமதிக்காது என்றபோதிலும் பெரும் இறுக்கமான போட்டிக்கு மத்தியில் அவருக்கு வேறுவழியில்லை என்பதால் ஒரு சூதாட்டம் போலவே இவ்வழியை அவர் தெரிந்தெடுத்திருக்கிறார். அதாவது தீவிர இனவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்து தன்னை ஒரு தீவிர பௌத்த சிங்களவன் எனக்காட்டுவதன் மூலமாவது, தேர்தலில் வெற்றி பெற்று விட முடியுமா? என அவர் முனைந்து நிற்கிறார்.

இந்நிலையில் அவர் யாழ் வந்து ஒரு நாடகத்தையும் நடத்தி முடித்திருக்கிறார்.அதாவது யாழ் மக்கள் ரணிலுக்குத்தான் ஆதரவளிப்பார்கள் என்ற ஒரு தோற்றப்பாடு தென்பகுதியில் நிலவுகின்ற சூழ்நிலையில்- அவ்வாறானதொரு தீவிர பிரச்சாரத்தில் ஐக்கிய தேசியக்கட்சி ஈடுபட்டுள்ள நிலையில், நிலைமை அவ்வாறில்லை என்ற தோற்றத்தை தென்பகுதியில் ஏற்படுத்துவதே அவரது இந்த நாடகத்தின் நோக்கமாகும்.

ஆனால் அவருக்கு அடிப்படையில் சிறுபான்மையின மக்களின் வாக்கு தனக்கு பெருமளவில் கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்குமென கொள்ளமுடியாது. அது அவரது நோக்கமல்ல.அவரது வியூகம் முழுவதும் தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்களை நோக்கியதே.

ஆனால் இந்த வியூகம் மீண்டும் ஒரு யுத்தத்தை உடனடியாகவே தோற்றுவித்து விடுமோ? என்ற கேள்வி யுத்தத்தை விரும்பாத சிங்கள மக்களிடையே உள்ளமையும் வெளிப்படை. ஏனெனில் அவருடன் கூட்டுச்சேர்ந்துள்ளவர்கள் சிறிதுகாலத்துக்காவது சமாதானப் பேச்சு வார்த்தைகள் நீடிப்பதை விரும்பாதவர்களாக இருக்கின்றமையே காரணமாகும்.

இவ்வாறான மனப்போக்குக் கொண்ட சிங்கள மக்களை இலக்குவைத்ததாகவே ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் வியூகம் அமைந்திருக்கின்றது. இதற்கு அவர் 2002ஆம் ஆண்டு செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் துணையாக இருக்கின்றது.

இருதரப்பினரும் வேலைவாய்ப்பு, வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், அரச ஊழியர் சம்பள உயர்வு, உரவிலைக் குறைப்பு என்றெல்லாம் போட்டிபோட்டுக் கொண்டு விடுக்கும் அறிவிப்புக்களை நம்பி எவராவது வாக்களித்தால் அவர்கள் பரிதாபத்துக் குரியவர்களாகவே இருப்பர்

உதாரணமாக ஐக்கிய தேசியக் கட்சி ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப் போவதாகக் கூற மகிந்த ராஜபக்ஷ ஆண்டொன்றுக்கு ஐந்து இலட்சம் வேலைவாய்ப்பு என்று கூறியிருக்கிறார். அவ்வாறாயின் ரணில் நாளொன்றுக்கு சுமார் 600வேலைவாய்ப்புக்களையும் மகிந்த ராஜபக்ஷ நாளொன்றுக்கு சுமார் 1500 வேலைவாய்ப்புக்களையும் வழங்க வேண்டியவராக இருக்கிறார்.

இது சாத்தியமானது தானா? எனச் சிந்திக்கும் வாக்காளர் எவரும் இவர்களின் வாக்குறுதிகளை நம்பி வாக்களிக்க முடியாது அதேபோன்றவையே வாழ்க்கைச்செலவு குறைப்பு சம்பள உயர்வு போன்றவையும் 1970ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்க இரண்டு கொத்து அரிசிஇலவசமாக வழங்குவதாகக் கூறி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட உணவுப்பற்றாக்குறையின் காரணமாக 17 ஆண்டுகள் அவர் ஆட்சிபீடம் ஏறமுடியாமல் போயிற்று. அதேபோல 1977தேர்தலில் எட்டு இறாத்தல் தானியம் வழங்கப்போவதாகக் கூறி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஐந்தில் நான்கு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தார்.

இவ்வாறான ஏமாற்றுகள் வாக்குறுதிகளாக வழங்கப்படுவதும் பின்னர் அவை கைவிடப்படுவதும் பொதுவாக ஏமாற்று அரசியல்வாதிகள் அனைவரதும் செயற்பாடாக இருந்து வருகின்றது. அந்த வகையிலேதான் இம்முறையும் இவர்களால் பல்வேறு வாக்குறுதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.


ஜே.ஆர்.

ஆனால் இவ் வாக்குறுதிகளில் ஒருசிலவேனும் நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டுமானால் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு அமைதி ஏற்பட வேண்டும் என்பது1994 இலேயே சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டது. 1994 இல் இனப்பிரச் சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது என்ற வாக்குறுதியை வழங்கிய மையினாலேயே சந்திரிகா குமாரதுங்க 62 சதவீத வாக்குகளுடன் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட முடிந்தது.

அந்தத் தேர்தலிலும் அவர் மாவின் விலையைக் குறைப்பேன், பாணின் விலையைக் குறைப்பேன், மைசூர் பருப்பின் விலையை குறைப்பேன், என வாக்குறுதி வழங்கியிருந்தார் தான். ஆனால் சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் யுத்தத்திற்குச் செலவிடும் பணத்தை மீதப்படுத்தியே அவற்றைச் செய்யப் போவதாகக் கூறியிருந்தார்.

ஆனால் அதற்கு மாறாக சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரிலும் "புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிப்பது" என்ற பெயரிலும் பாரிய யுத்தத்தை நடத்தி தமிழ் மக்களைப் பெரும் அவலத்துக்குள் தள்ளியதுடன் யுத்தச் செலவீனம் பலமடங்காக அதிகரித்ததன் காரணமாக சிங்கள மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையும் ஏற்பட்டது. அத்துடன் அவரது முதலாவது ஆட்சிக் காலத்தின் இறுதியில் பொருளாதார வளர்ச்சி எதிர்கணியத்திற்குச் சென்றது மட்டுமல்லாது இரண்டாவது ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் யுத்தத்தைக் கூட எந்தத் திசையில் நகர்த்துவது என்பது தெரியாது திண்டாடும் நிலை ஏற்பட்டது.

பின்னர் 2001 டிசெம்பரில் நடந்த பொதுத் தேர்தலில் மக்கள் இனப்பிரச்சினைக்கு புலிகளுடன் பேசி சமாதான வழியில் தீர்வு காண்பதற்கான ஆணையை ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கினர். ஆனால் அவர் அதனைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையை மட்டுமல்ல பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட இணக்கப்பாடுகளைக் கூட அவர் சரிவரச் செயற்படுத்த முயலவில்லை.

சனாதிபதி சந்திரிகாவிடம் நிறைவேற்று அதிகாரம் இருந்தபோதும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட முடிந்த அவருக்கு அதனை அமுல்படுத்த அதிகாரம் இல்லை எனக் கூறிவிட முடியாது. ஓராண்டுக்கு மேலாக பாதுகாப்பு அமைச்சும் அவர் வசமே இருந்தது. அத்துடன் பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட முடிவுகளை அவர் நடைமுறைப்படுத்தியிருந்தால் அதனால் தென்பகுதி மக்களுக்கும் நன்மை கிடைத்திருக்கும். சனாதிபதி சந்திரிகா ஆட்சியைக் கலைத்திருந்தாலும் மக்கள் மீண்டும் அவரையே தெரிவு செய்திருப்பார்கள்.

ஆனால் அவரின் தேவையற்ற தயக்கங்களும் நேர்மையாக சமாதான முயற்சிகளை முன்னெடுக்காது தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிராக சர்வதேச வியூகமொன்றை வகுப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகளும் இந்தச் சமாதான முயற்சிகளின் நன்மைகள் சாதாரண மக்களுக்குச் சென்றடையாது தடுத்துவிட்டது. இதனால் அவர் தோல்வியடைய நேர்ந்தது.


சிறீமாவோ

இப்பொழுதும் கூட ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை, சமாதானத் தீர்வு என்பன பற்றி எவ்வாறு தான் கூறிக்கொண்டாலும், இறுதியில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும் என்று கூறிக் கொள்வது இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்தாது கைவிடுவதற்கானதே. சிறிலங்காவின் அரசியல் தலைவர்கள் இவ்வளவு காலமும் எவ்வாறு மக்களை ஏமாற்றி வந்தார்களோ அவர்களின் வழியிலேயே ரணிலின் பயணமும் என்பதை இதுவொன்றே வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

அவ்வாறாயின் 1972 இல் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு 1978 இல் சர்வ அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்ட சனாதிபதி முறையைக் கொண்ட அரசியல் யாப்பு ஒன்று உருவாக் கப்படும்போது சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டதா? 1994 இல் சமாதானம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா யுத்தம் நடத்த சர்வசன வாக்கெடுப்பு நடத்தி னாரா?

சமாதானத் தீர்வில் சிங்களத் தலைவர்களுக்கு உண்மையிலேயே நம்பிக்கையிருக்குமானால் சிங்கள மக்கள் முன் தமது தீர்வுத் திட்டத்தை விரிவாகப் பகிரங்கமாக முன்வைத்து தேர்தலில் போட்டியிட வேண்டும். அவ்வாறில்லாதபடியால் அவர்கள் எல்லா விடயத்தையும் போலவே இவ்விடயத்திலும் சிங்கள மக்களை ஏமாற்ற முயல்கின்றனர் என்பதே அர்த்தமாகும்.

எனவே சிங்கள மக்களை ஏமாற்ற முயலும் இவர்கள் தமிழ் மக்களுக்கு மட்டும் எவ்வாறு நேர்மையானவர்களாக நடந்து கொள்ளப்போகிறார்கள்? இவர்களில் யாருக்கு வாக்களித்தாலும் வெற்றிபெற்ற பின் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து கொள்வதற்கே அதனைப் பயன்படுத்தப் போகிறார்கள். அதாவது தமது தேர்தல் வாக்குறுதிகளுக்கு புதிய வியாக்கியானம் வழங்குவார்களே யொழிய உண்மையாக நடந்து கொள்ளப் போவதில்லை.

அதாவது பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் சமாதானத்துக்கான யுத்தம், புலிகளிடமிருந்து மக்களை விடுவிப்பது, மக்கள் மனங்களை வெல்வது என்றெல்லாம் கூறிக் கொண்டு சந்திரிகா நடந்து கொண்டதுபோல தமிழ் மக்களின் வாக்குகளைப் பயன்படுத்தி தமிழ் மக்களை மேலும் துன்பத்துக்குள் தள்ளுவதே இவர்களின் செயற்பாடாக இருக்கும்.

— வேலவன்

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

## மன்னார் மாவட்டம்

ம/477 திருமதி. மேரிஅக்னஸ் ஆனந்தராசா
ம/478 திரு. தேவதாசன் திவ்வியதாசன்
ம/483 திரு. செல்லையா அன்ரனினஸ்
ம/484 திரு. வயிரவநாதர் சிவபாலன்
ம/486 திரு. நீக்கிளான் மரியநாயகம்
ம/488 திருமதி. லூர்துமலர் செல்வராசா
ம/490 திரு. இராசதுரை பொன்னம்பலம்
ம/491 திரு. அந்தோனிப்பிள்ளை அல்வின்
ம/494 திரு. இராசையா திருச்சிற்றம்பலம்
ம/498 திருமதி. அலோசியாமேரிமொனிக்கா யோசெவ் மரியநாயகம்
ம/499 திரு. யோசப் ஜோர்ச்
ம/502 திரு. யேசுதாசன் ஜெயரட்ணம்
ம/503 திரு. செபமாலை அருள்நேசம்
ம/504 திரு. சவரிமுத்து முடியப்பன் (ஸ்ரீபன்)
ம/505 திரு. தேவசகாயம் ஆபிரகாம்
ம/508 திரு. இராசையா கிறிஸ்தோப்பர்
ம/509 திரு. கனகரெத்தினம் வாரித்தம்பி
ம/510 திரு. தம்பிராசா மனோகரன்
ம/512 திரு. கறுப்பையர் செல்வகுமார்
ம/513 திரு. பாக்கியம் கருணைராஜா
ம/515 திரு. சூசை அருளப்பு
ம/518 திரு. பெஞ்சமின் றோமவால்
ம/520 திரு. அந்தோனிப்பிள்ளை ரவி
ம/522 திரு. நசரேத் சூசையப்பு லெம்பட்
ம/525 திரு. முத்தையர் அரிச்சந்திரன்
ம/526 திரு. முருகேசு கந்தையா
ம/528 திரு. அந்தோனிப்பிள்ளை ஜோர்ச் செல்வராசா
ம/529 திரு. ஐயம்பிள்ளை மதியாபரணம்
ம/531 திரு. யக்கோவு அந்தோனி
ம/533 திரு. சிமியோன் சூசைநாயகம்
ம/534 திருமதி. அந்தோனிக்கம்மா மருசிலீன்
ம/535 திரு. சரவணை கணேசன்
ம/541 திருமதி. அங்கயற்கண்ணி சதாசிவம்
ம/542 திரு. ஆறுமுகம் மருதை
ம/544 திரு. செல்வரத்தினம் பத்திராசன்
ம/545 திரு. சங்கரப்பிள்ளை ரவிச்சந்திரன்
ம/550 திரு. அபுறாம்பிள்ளை அன்ரன்
ம/551 திரு. அம்பலவாணர் நாகலிங்கம்
ம/552 திரு. கணபதிப்பிள்ளை புலேந்திரராஜன்
ம/553 திரு. முத்தையா சிறிகாந்தன்
ம/558 திரு. நடேஸ் காசிராசா
ம/559 திரு. ஆறுமுகம் சூரியகுமார்
ம/561 திரு. பிலிப்பு செலஸ்ரீன் அருளப்பு
ம/563 திரு. பிலிப்பு பத்திநாதன்
ம/564 திரு. சூசை பிரான்சிஸ் சேவியர்
ம/565 திரு.தில்லையம்பலம் சிவசுப்பிரமணியம்
ம/566 திரு. கணபதிப்பிள்ளை சண்முகராசா
ம/568 திரு. இரத்தினசிங்கம் கேதீஸ்வரநாதன்
ம/571 திரு. அருளானந்தம் அன்ரன்
ம/574 திரு. அவுராம்பிள்ளை சந்திரசேகரம்
ம/575 திரு. மருதப்பு சண்முகநாதன்
ம/580 திரு. அந்தோனி செபஸ்தியான்பீரிஸ்
ம/583 திரு. அந்தோனி யேசுதாசன்பீரிஸ்
ம/584 திரு. காமாட்சி ராஜதுரை
ம/585 திரு. வெள்ளையன் இலங்கராசு
ம/587 திரு. அலோசியஸ் இருதயதாசன்லோகு
ம/589 திரு. பிலிப்பு எமலியன்ஸ்சில்வா
ம/591 திரு. பிலுப்புப்பிள்ளை கிறேசியன்
ம/592 திரு. அந்தோனி ஞானசீலன்கொடுதோர்
ம/593 திரு. குப்புசாமி கணேசலிங்கம்
ம/594 திரு. செல்லன் இந்திரராஜா
ம/598 திரு. செபமாலை பிரான்சிஸ்
ம/602 திரு. செல்வம் ரகுநாதன்
ம/606 திரு. பிலிப்புப்பிள்ளை சந்தாம்பிள்ளை
ம/607 திரு. சந்தான் சில்வேந்திரன்
ம/608 திரு. செபஸ்தியாம்பிள்ளை சகாயசீலன்
ம/610 திரு. சந்தாம்பிள்ளை நவரெட்ணம்
ம/613 திரு. அந்தோனி சந்தான்
ம/614 திரு. தொம்மை அந்தோனிப்பிள்ளை
ம/615 திரு. சூசை செபஸ்ரியான்
ம/616 திரு.அந்தோனி சூசைப்பிள்ளை கொடுதோர்
ம/617 திருமதி. திரேசா கணேசபிள்ளை
ம/621 திரு. ஏனோக்கு ஞானசவுந்தரம்
ம/622 திரு. ஞானசேகரம் கமலநாதன்
ம/623 திருமதி. விஜயகுமாரி ஜெபராஜசிங்கம்
ம/624 திருமதி. பிறேமராணி ஜேசுதாசன்
ம/625 திருமதி. மரியை வேதநாயகம்
ம/628 திரு. மனுவேல் சந்தான்
ம/630 திரு. மரியாம்பிள்ளை சிங்கராசா
ம/631 திரு. அந்தோனி பர்னாந்து
ம/632 திரு. செபமாலை டேவிற்டபரேரா
ம/633 திரு. கயித்தான் பர்ணபாஸ்
ம/634 திரு. மடுத்தீன் யேசுதாசன்
ம/636 திருமதி. செபஸ்தியம்மா அந்தோனிப்பிள்ளை
ம/639 திரு. சவரிமுத்து சாந்தப்பர்லியோன்
ம/641 திரு. மனுவேல் மரியதாசன்
ம/645 திரு. பிரான்சிஸ்பிள்ளை தியோகுப்பிள்ளை
ம/646 திரு. செபமாலை சந்தியாகு
ம/647 திரு. யோவான் பெனாண்டோ
ம/649 திரு.செபமாலைப்பிள்ளை கிரகோரிப்பிள்ளை
ம/653 திரு. அந்தோனி சந்தான் கொடுதோர்
ம/655 திரு. அதிரியாம்பிள்ளை அன்ரன்
ம/656 திரு. பிலிப்பு அந்தோனிபீரிஸ்
ம/658 திரு. யேசுதாசன் லெயோனாட்பறுணாந்து
ம/659 திரு. சேவியர் காணிக்கைநாதன்கூஞ்ஞன்
ம/661 திரு. யோவான் யேசுசகாயம்
ம/666 திரு. ஆரோக்கியம் சிந்தாத்துரை
ம/667 திரு. இராமலிங்கம் இராமதுரை
ம/668 திரு. சந்தியாப்பிள்ளை செல்வநாயகம்பிள்ளை
ம/669 திரு. செபமாலை யேசுதாசன்குரூஸ்
ம/670 திரு. தோமஸ் கொன்சால்லியோன்
ம/673 திரு. வெள்ளைச்சாமி செல்வரெத்தினம்
ம/674 திரு. உவில்லியம் அன்ரன்பாலேந்திரராஜா
ம/676 திருமதி. சூசையம்மா சந்தாம்பிள்ளை
ம/677 திரு. சூசைப்பிள்ளை யேசுதாசன்
ம/678 திரு. பெஞ்சமின்பிள்ளை மரியாம்பிள்ளை
ம/679 திரு. தோமஸ் பீற்றர்லியோன்
ம/680 திரு. பிரான்சிஸ்பிள்ளை பிலிப்விஜயகுமாரன்
ம/681 திரு. சீமாம்பிள்ளை இம்மானுவேல்
ம/682 திரு. அந்தோனி அருளப்பு
ம/683 திரு. அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை கோமஸ்
ம/686 திரு. வயித்தி சூசைதாசன்
ம/689 திரு. சந்தியோகு யேசுதாசன்
ம/690 திரு. அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
ம/691 திரு. நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
ம/692 திரு. பிரான்சிஸ்பிள்ளை சீலன்
ம/693 திரு. அந்தோனி சந்தியோகு
ம/694 திரு. சந்தான் யேசுதாசன்
ம/696 திரு. அந்தோனி அல்பிறட்
ம/698 திரு. பொன்னுத்துரை சண்முகலிங்கம்
ம/699 திரு. வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்
ம/700 திரு. நாகையா ஆறுமுகசாமி
ம/705 திரு. சண்முகநாதன் தேவராசா
ம/714 திரு. அந்தோனிப்பிள்ளை பொமிக்கா
ம/717 திரு. பேதுறு எமிலியானுஸ்பிள்ளை
ம/718 திரு. குமாரசாமி செல்வச்சீராளன்
ம/720 திரு. வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
ம/721 திரு. பொன்னம்பலம் தர்மலிங்கம்
ம/725 திரு. சண்முகநாதன் ஜெகநாதன்
ம/728 திரு. கணபதிப்பிள்ளை தர்மராசா
ம/729 திரு. ஆறுமுகம் கனகலிங்கம்
ம/730 திரு. காத்தி துரைச்சாமி
ம/731 திரு. கந்தசாமி ஜெகநாதன்
ம/732 திரு. இராமலிங்கம் சுப்பையா
ம/733 திரு. சரவணமுத்து குணரத்தினம்
ம/741 திரு. சுப்பிரமணியம் மகாலிங்கம்
ம/744 திரு. கிருஸ்ணசாமி கருணாகரன்
ம/747 திரு. நவரத்தினம் சத்தியநாதன்
ம/749 திரு. கபிரியல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
ம/751 திரு. பொன்னுச்சாமி புவனேஸ்வரன்
ம/757 திரு. நடராசா சிவபாதசுந்தரம்
ம/759 திரு. செல்லத்தம்பி விஜயகுமார்
ம/761 திரு. கணபதிப்பிள்ளை மோகனராசா
ம/762 திரு. செல்லையா கர்ணன்
ம/763 திரு. இராசையா செல்வநாயகம்
ம/764 திரு. முருகன் கிருஷ்ணபிள்ளை
ம/765 திரு. கதிரேசு யோகநாதன்
ம/766 திரு. தியோகு சார்வே
ம/767 திரு. செல்வன் சர்வானந்தம்
ம/771 திரு. சங்கரப்பிள்ளை கந்தசாமி
ம/772 திரு. இராமு ஜெயபாலன்
ம/773 திரு. முருகுப்பிள்ளை நவரத்தினம்
ம/775 திருமதி. கமலாசினி கலாசுந்தரம்

## பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

கி/ப/41 திரு. மயிலு இரத்தினம்
கி/ப/73 திரு. இலகுப்பிள்ளை குமாரசாமி
கி/ப/84 திரு. கந்தையா அருளம்பலம்
கி/ப/225 திரு. கந்தையா முத்துத்தம்பி
கி/ப/228 திரு. முத்தையா ஐயாத்துரை
கி/ப/261 திருமதி.சின்னப்பிள்ளைவேலும்மயிலும்
கி/ப/285 திரு. சின்னத்துரை சுந்தரலிங்கம்
கி/ப/314 திரு. நல்லதம்பி மூத்ததம்பி
கி/ப/351 திருமதி. ஞானப்பு அகஸ்ற்ரீன்
கி/ப/411 திருமதி. செல்லம்மா ஞானப்பிரகாசம்
கி/ப/469 திரு. தம்பையா சங்கரப்பிள்ளை
கி/ப/538 திருமதி. சிவபாக்கியம் பரமு
கி/ப/551 திருமதி. அன்னலட்சுமி குலசிங்கம்
கி/ப/587 திரு. தமியாம்பிள்ளை மரியாம்பிள்ளை
கி/ப/659 திரு. கவுண்டர் பாலையா
கி/ப/685 திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி
கி/ப/692 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
கி/ப/710 திரு. கந்தன் கிட்டினன்
கி/ப/726 திரு. கதிரவேலு முருகேசு
கி/ப/742 திரு. மயிலு சின்னத்தம்பி
கி/ப/757 திரு. இளையதம்பி மயில்வாகனம்
கி/ப/764 திருமதி. வள்ளியம்மை நல்லதம்பி
கி/ப/790 திருமதி. நாகம்மா கணபதிப்பிள்ளை
கி/ப/793 திருமதி. பழுத்தலி பத்தன்
கி/ப/813 திருமதி. சிவக்கொழுந்து கதிரவேலு
கி/ப/831 திருமதி. தங்கம்மா நவரத்தினம்
கி/ப/943 திரு. இராமன் பிச்சன்

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

யா/பரு/23 திருமதி. செல்லபாக்கியம் இராஜதுரை
யா/பரு/126 திரு. திருஞானசம்பந்தர் வேலுப்பிள்ளை
யா/பரு/145 திரு. சுப்பிரமணியம் குமரகுரு
யா/பரு/164 திருமதி. புஸ்பலீலாவதி சிவராசா
யா/பரு/166 திரு. கந்தசாமி திருநடராஜா
யா/பரு/182 திருமதி. தையல்நாயகி கதிர்காமதாசன்
யா/பரு/258 திரு. குழந்தைவேல் ஞானவேல்
யா/பரு/296 செல்வி. நேசமலர் வேலுப்பிள்ளை
யா/பரு/300 திருமதி. தங்கம்மா கிருஷ்ணபிள்ளை
யா/பரு/349 திரு. தனபாலசிங்கம் ஆறுமுகநாதன்
யா/பரு/353 திருமதி. இலட்சுமியம்மா காங்கேயபிள்ளை
யா/பரு/371 திரு. பொன்னுத்துரை தியாகராசா
யா/பரு/439 திருமதி. சிவகாமிஅம்மா பாலசுந்தரம்
யா/பரு/441 திருமதி. சின்னம்மா பரராஜசிங்கம்
யா/பரு/450 திரு. பொன்னு சின்னத்துரை
யா/பரு/552 திரு. வைத்தியநாதன் பஞ்சலிங்கம்
யா/பரு/600 திருமதி. தவமணி பழனிவேல்
யா/பரு/601 திரு. கதிரித்தம்பி கிருஸ்ணபிள்ளை
யா/பரு/615 திரு. துரைசாமி பேரம்பலம்
யா/பரு/619 திரு. சுப்பிரமணியம் பரஞ்சோதி
யா/பரு/634 திரு. சிதம்பரப்பிள்ளை வேலாயுதம்
யா/பரு/662 திருமதி. தவமலர் கந்தசாமி
யா/பரு/664 திரு. கதிரவேலு சிவசிவா
யா/பரு/694 திரு. சதாசிவம்பிள்ளை மகேந்திரன்
யா/பரு/698 திருமதி. பரமேஸ்வரி பாலசுந்தரம்
யா/பரு/707 திரு. மோசேஸ் யேசுதாசன்
யா/பரு/751 திரு. கணபதிப்பிள்ளை தம்பிராசா
யா/பரு/766 திரு. சங்கரப்பிள்ளை இராமநாதன்
யா/பரு/787 திரு. வேலுப்பிள்ளை சந்திரசேகரம்
யா/பரு/802 திருமதி. பாக்கியம் பொன்னையா
யா/பரு/809 திருமதி. செல்லம்மா அன்னலிங்கம்
யா/பரு/848 திரு. செல்லையா சிவராசசிங்கம்
யா/பரு/857 திருமதி. கனகம்மா இரத்தினசபாபதி
யா/பரு/900 திரு. சின்னையா சிவகுமாரன்
யா/பரு/907 திருமதி. திலகவதி வயிரவநாதன்
யா/பரு/929 திரு. மாணிக்கம் நடராசா
யா/பரு/939 திரு. சீமாம்பிள்ளை அந்தோனிமுத்து
யா/பரு/960 திரு. சுப்பிரமணியம் லோகநாதன்
யா/பரு/963 திரு. குமாரசாமி கணபதிப்பிள்ளை
யா/பரு/966 திருமதி. சுபத்திராதேவி நாகலிங்கம்
யா/பரு/978 திரு. யோசப் வரப்பிரகாசம்
யா/பரு/1006 திரு. கந்தையா பாலசுப்பிரமணியம்
யா/பரு/1016 திரு. கந்தையா ஆறுமுகம்
யா/பரு/1042 திரு. கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம் தர்மராஜதுரை
யா/பரு/1067 திரு. கந்தையா சின்னத்துரை
யா/பரு/1076 திரு. குமரேசு கனகசுந்தரம்
யா/பரு/1149 திரு. வினாசித்தம்பி இராசரத்தினம்
யா/பரு/1163 திருமதி. மனோன்மணி இராமகிருஷ்ணன்
யா/பரு/1191 திருமதி. இராசேஸ்வரி சற்குணராசா
யா/பரு/1245 திருமதி. கமலாம்பிகை கந்தசாமி
யா/பரு/1276 திருமதி. அமிர்தம்மா சுப்ரமணியம்
யா/பரு/1290 திரு. கந்தையா வரதலிங்கம்
யா/பரு/1353 திரு.இராசதுரை மகாகணபதிப்பிள்ளை
யா/பரு/1361 திருமதி. இலட்சுமிப்பிள்ளை திருநாவுக்கரசு
யா/பரு/1443 திருமதி. கமலபூரணம் சிவமூர்த்தி
யா/பரு/1445 திருமதி. மீனலோசனி நல்லையா
யா/பரு/1451 திரு. விநாகயமூர்த்தி மாணிக்கராசா
யா/பரு/1465 திருமதி. இலட்சுமி வேலுப்பிள்ளை
யா/பரு/1467 திரு. துரைராசா சிவசம்பு
யா/பரு/1479 திருமதி. கனகம்மா சுப்பிரமணியம்
யா/பரு/1480 திருமதி. கனகம்மா சுப்பிரமணியம்
யா/பரு/1509 திருமதி. செல்வநாயகி செல்லத்துரை
யா/பரு/1510 திரு. ஆறுமுகம் கந்தையா சண்முகநாதன்
யா/பரு/1526 திரு. சுப்பிரமணியம் துரைராசா
யா/பரு/1527 திரு. ஆழ்வாப்பிள்ளை தங்கராசா
யா/பரு/1531 திரு. சின்னையா கணபதிப்பிள்ளை
யா/பரு/1545 திருமதி. லூர்த்தம்மா மத்தியாஸ்
யா/பரு/1547 திருமதி. தங்கம்மா சிவலிங்கம்
யா/பரு/1574 திரு. கந்தையா மார்க்கண்டு
யா/பரு/1693 திரு. தில்லையம்பலம் முருகையா
யா/பரு/1699 திருமதி. பூரணம் சிவசுப்பிரமணியம்
யா/பரு/1706 திருமதி. சரஸ்வதி திருநாவுக்கரசு
யா/பரு/1755 திருமதி. பரமேஸ்வரி சிவானந்தம்
யா/பரு/1763 திருமதி. கமலாம்பிகை சுப்பிரமணியம்
யா/பரு/1809 திருமதி. இரஞ்சிதேவி சர்வானந்தம்
யா/பரு/1842 திரு. இராமசாமி ஸ்ரீநடராசா
யா/பரு/1875 திரு. சோமசுந்தரம் சிவபாதசுந்தரம்
யா/பரு/1879 திரு. கந்தசாமி பாலசிங்கம்
யா/பரு/1892 திருமதி. இராஜேஸ்வரி சிவகுகதாசன்
யா/பரு/1895 திருமதி. சீதாலக்சுமி ஞானசுந்தரம்
யா/பரு/1971 திரு. முருகன் இராசையா
யா/பரு/1975 திருமதி. மீனாவதி பழனிவேல்
யா/பரு/1977 திருமதி. தர்மபூபதி துரைராசா
யா/பரு/1978 திருமதி. மீனாட்சி குட்டி
யா/பரு/1988 திரு. செல்லத்துரை அருட்பிரகாசம்
யா/பரு/2038 திரு. பொன்னம்பலம் குலேந்திரன்
யா/பரு/2066 திரு. அருணாசலம் இராசரத்தினம்
யா/பரு/2096 திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி
யா/பரு/2124 திரு. நடராசா கனகசபை
யா/பரு/2190 திருமதி.தெய்வானை கிருஷ்ணபிள்ளை
யா/பரு/2207 திரு. கிட்டிணன் செல்லத்துரை
யா/பரு/2221 திரு. வேலுப்பிள்ளை தங்கவேல்
யா/பரு/2236 திரு. மயிலன் சின்னத்தம்பி
யா/பரு/2244 திருமதி.சிவயோகமலர் கணபதிப்பிள்ளை
யா/பரு/2268 திருமதி. திருமலர் பாலசுப்பிரமணியம்
யா/பரு/2274 திரு. சுப்பிரமணியதேசிகர் சிவசங்கரன்
யா/பரு/2285 திருமதி. கற்பகத்தரசி அழகக்கோன்
யா/பரு/2324 திருமதி. பரமேஸ்வரி வேலாயுதம்
யா/பரு/2382 திருமதி. பத்மாவதி ஏரம்பமூர்த்தி
யா/பரு/2386 திருமதி. சின்னத்தங்கம் சுப்பிரமணியம்
யா/பரு/2430 திரு. புதியார் கதிரவேலு
யா/பரு/2441 திரு. பொன்னர் அண்ணாமலை
யா/பரு/2442 திருமதி. இரத்தினபூபதி சிவப்பிரகாசம்
யா/பரு/2449 திரு. வெற்றிவேலு அமிர்தலிங்கம்
யா/பரு/2454 திரு. பொன்னர் கணபதிப்பிள்ளை
யா/பரு/2456 திரு.சின்னையாமுருகுப்பிள்ளை தம்பிராசா
யா/பரு/2518 திரு. சிதம்பரப்பிள்ளை சிவராசா
யா/பரு/2533 திரு. ஐயம்பிள்ளை திருச்சிற்றம்பலம்
யா/பரு/2539 திருமதி. ருக்மணி வடிவேலு
யா/பரு/2549 திருமதி. இராசமாணிக்கம் மண்டலேஸ்வரன்
யா/பரு/2573 திருமதி. பரமேஸ்வரி சின்னையா
யா/பரு/2579 திருமதி. மகேஸ்வரி உருத்திரா
யா/பரு/2581 திரு. சின்னையா அருணாசலம்
யா/பரு/2590 திருமதி.செல்வச்சரஸ்வதி குலவீரசிங்கம்
யா/பரு/2604 திருமதி. பரமேஸ்வரி சிவகுமாரன்
யா/பரு/2609 திரு. பெரியான் சின்னையா
யா/பரு/2631 திரு. விநாசித்தம்பி பாலசிங்கம்
யா/பரு/2639 திரு. அகஸ்ரின் அல்வீனஸ்
யா/பரு/2645 திரு. செல்லையா நடராசா
யா/பரு/2688 திரு. இரத்தினசபாபதி சோமாஸ்கந்தர்
யா/பரு/2704 திரு. கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகம்
யா/பரு/2724 செல்வி. மனோன்மணி அருணாசலம்
யா/பரு/2753 செல்வி. சுகன்யா சிவானந்தன்
யா/பரு/2763 திருமதி. செல்வதேவி தேவதாஸ்
யா/பரு/2823 திருமதி. தவமணி தம்பிராசா
யா/பரு/2830 திரு. சபாபதிப்பிள்ளை கிட்டினர்
யா/பரு/2834 திருமதி. புனிதவதி தங்கவடிவேல்
யா/பரு/2896 திரு. சபாபதிப்பிள்ளை அருளானந்தராசா
யா/பரு/2906 செல்வி. இராசமணி சுப்பிரமணியம்
யா/பரு/2945 திரு. பொன்னையா நடராசா
யா/பரு/2949 திருமதி. ஞானஅமிர்தம் இராமநாதன்
யா/பரு/2960 திரு. நடராசா இரத்தினகோபால்
யா/பரு/2976 திரு. காந்தார் வேலுப்பிள்ளை
யா/பரு/3014 திரு. பழனி இராசமாணிக்கம்
யா/பரு/3021 திரு. வல்லிபுரம் பொன்னையா
யா/பரு/3089 திருமதி. பாக்கியம் பசுபதி
யா/பரு/3126 திரு. சின்னத்துரை குலசேகரம்
யா/பரு/3164 திருமதி. இராசமணி மாணிக்கம்
யா/பரு/3197 திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை
யா/பரு/3201 திரு. சண்முகம் இரத்தினவடிவேல்
யா/பரு/3226 திருமதி. கமலாவதி விநாசித்தம்பி
யா/பரு/3236 திரு. கோணமலை சங்கரப்பிள்ளை
யா/பரு/3274 திருமதி.கதிராத்தைப்பிள்ளை சதாசிவம்
யா/பரு/3382 திரு. நாகப்பர் செல்லையா
யா/பரு/3411 திரு. பொன்னர் கனகசபை
யா/பரு/3415 திருமதி. ஈஸ்வரி பரமகுரு
யா/பரு/3425 திருமதி. பாலாமிர்தமுது புவனேந்திரன்
யா/பரு/3482 திரு. வயிரவி சுப்பையா
யா/பரு/3492 திருமதி. கமலாம்பிகை சண்முகலிங்கம்
யா/பரு/3499 திரு. முத்து தங்கவேல்
யா/பரு/3505 திருமதி. கலைச்செல்வி கிருஷ்ணபிள்ளை
யா/பரு/3509 திருமதி. கனகேஸ்வரி சுந்தரசிங்கம்
யா/பரு/3524 திரு. சின்னையா நடராசா
யா/பரு/3564 திரு. கணேசு விக்கினேஸ்வரமூர்த்தி
யா/பரு/3601 திருமதி. சரஸ்வதி கிட்டினபிள்ளை
யா/பரு/3617 திருமதி. பகவதி சங்கரப்பிள்ளை
யா/பரு/3644 திருமதி. லக்சுமி கதிரன்
யா/பரு/3645 திருமதி. இலட்சுமிப்பிள்ளை செல்லையா
யா/பரு/3648 திருமதி. சரஸ்வதி கதிரவேலு
யா/பரு/3655 திருமதி. ஈஸ்வரதேவி தியாகராசா
யா/பரு/3692 திருமதி. பரமேஸ்வரி கனகசுந்தரம்
யா/பரு/3765 திருமதி. ஜானகிஅம்மா பாலசுந்தரம்
யா/பரு/3771 திருமதி. இரத்தினம்மா செல்லக்கண்டு
யா/பரு/3789 திரு. குமரேசு முருகுப்பிள்ளை
யா/பரு/3793 திரு. முத்துச்சாமி கந்தசாமித்துரை
யா/பரு/3812 திரு. நல்லதம்பி பாலசுப்பிரமணியம்
யா/பரு/3846 திருமதி. சின்னப்பிள்ளை செல்லையா
யா/பரு/3854 திருமதி. லோகநாயகி குமாரசாமி
யா/பரு/3882 திரு. குழந்தையன் வடிவேல்
யா/பரு/3887 திரு. சாத்தப்பா துரைராசா
யா/பரு/3910 திரு. சுப்பிரமணியம் சின்னத்துரை
யா/பரு/3942 திருமதி. பத்மாவதி கனகசபாபதி
யா/பரு/3959 திரு. சதாசிவம்பிள்ளை மகேந்திரன்
யா/பரு/3992 திரு. செல்லையா கதிரவேற்பிள்ளை
யா/பரு/3995 திரு. கணபதிப்பிள்ளை சபாரத்தினம்
யா/பரு/3997 திருமதி. தங்கம்மை கதிரவேலு
யா/பரு/4022 திரு. குழந்தை செந்திவேல்
யா/பரு/4049 திரு. ஆழ்வாப்பிள்ளை தங்கராசா
யா/பரு/4071 திரு. சபாபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
யா/பரு/4078 திரு. ஐயாத்துரைக்குருக்கள் லிங்கோற்பவநாதா
யா/பரு/4084 திரு. சந்திரசேகரம் முருகேசு சுப்பிரமணியம்
யா/பரு/4105 திரு. ஆறுமுகம் சின்னராசா
யா/பரு/4112 திரு. சின்னையா தேவராசா
யா/பரு/4120 திருமதி. திலகவதி நாகராஜா
யா/பரு/4125 திருமதி. லீலாவதி செல்வரெட்ணராசா
யா/பரு/4140 திரு. சத்தியாம்பிள்ளை பிலிப்பையா யோண் யோசேப்
யா/பரு/4242 திரு. வயிரவன் பூபாலசிங்கம்
யா/பரு/4274 திருமதி. இராசலெட்சுமி முத்துக்குமாரசாமி
யா/பரு/4298 திருமதி. முத்துமாணிக்கம்
யா/பரு/4302 திருமதி. சரஸ்வதி கிட்ணன்
யா/பரு/4314 திருமதி. காமாச்சி முத்துக்குமாரசாமிஐயா
யா/பரு/4362 திரு. கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்
யா/பரு/4380 திருமதி. நல்லம்மா சண்முகநாதன்
யா/பரு/4384 திரு. சிவப்பிரகாசம் சுந்தரானந்தம்
யா/பரு/4389 திருமதி. செல்வநாயகி முருகேசு

(தொடரும்)

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாணசபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்

## (நீகோட்)

## நிதி- ஆசிய அபிவிருத்தி வங்கி

## ஆஅவ கடன் இல-2084- சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் – இல. 59

01 வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம் (NECORD-EXT) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னால் தொழில் தருனராக குறிப்பிடப்படும் necord திட்டக் கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| KN/NECORD-EXT/ED/06 | கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நிர்வாக அலகு மற்றும் மாணவர் செயற்பாட்டு அலகு அமைத்தல் | M5 கட்டடங்கள் | 191,600/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

I நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தர மொன்றில் ஒப்பந்தக் காரராகப் பதிவு செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச)உறுப்பினராக விளங்கவேண்டும்.

III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன்,மேற்கொள்ளப் பட்ட வேலைகளில் திருப்தி கரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV "ICTAD"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்த காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. ஏ தாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55,கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி 026-2227434. /பக்ஸ் :-026--2227401 இணையத்தள முகவரி www.necord.org ஈமெயில் :necord @sltnet.lk

06 கேள்வி ஆவணங்களை 28.10.2005 இல் இருந்து 14.11.2005 வரை காலை 9.30 இருந்து மாலை 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 2000 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படல் வேண்டும்.

08. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்" 55, கந்தசுவாமி கோவில் வீதி, திரு கோணமலை என்ற விலாசமிடப்பட்டு 25.11.2005 காலை 11மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 14.11.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்பிற்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படுகின்றதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக மாட்டார்.

**த.லங்காநேசன்,**
**தலைவர்,கேள்விச்சபை,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்,**
**55,கந்தசுவாமி கோவில் வீதி,**
**திருகோணமலை.**

(சி 13307)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) M9 (கட்டட வேலைக்கு) ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.கீழே சுட்டிக்காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைபெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 07.11.2005 - 16.11.2005 பி.ப 2 மணி வரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 17.11.2005 நண்பகல்12 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி 17.11.2005 பி.ப.2மணி
   [திறக்கப்படும். சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்]
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம் மானிப்பாய் என்று முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ உஆம் பந்தியில் குறிப்பிட்ட தற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல்வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்று முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல | வேலைவிபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | Vat வரி 15% |
|---|---|---|---|---|
| 1. | கொல்களம் அமைத்தல் | 3300.00 | 300.00 | 45.00 |

*மேரி ஜோசப் சாந்தசீலன்,*
*செயலாளர்,*
*வலிதென்மேற்கு பிரதேசசபை,*
*மானிப்பாய்.*

(சி-13305)

---

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.

Schweizerisches Arbeiterhilfswerk SAH

Norwegian People's Aid

Tha Solidar Group an alliance of Humanitarin NGOs, including Norwegian People's Aid (NPA), Swiss Labor Assistance (SAH) and ASB sri lanka, a German-based rehabilitation and development INGO, is committed to rebuilding six villages in the North-East in the district of Jaffna as part of its Phase III Post-Tsunami Reconstruction & Rehabilitation Plan. Solidar is now looking to fill the following Positions to assist in the socio-economic mobilization and community development activities.

### MICROFINANCE EXPERT

A highly qualified person is required to develop a sustainable system for microfinance to support livelihood activities and income generation projects based on the village level planning. General duties will be:

- Taking the lead in the planning, implementation and management of the microfinance component
- Directly liaise with partner organizations, such as CBOs, local NGOs, and with the established banking sector.
- Capacity building and the development of a training program with relevance to microfinace activities.

A proven track record of working with local communities in the North-East is essential, as is an ability to speak fluent Tamil and English language.

### SMALL AND MEDIUM ENTERPRISE (SME) DEVELOPMENT EXPERT

An experienced and innovative person is required to develop home based industries, local micro enterprises as well as to support the establishment of new enterprises. The general duties comprise:

- Program development jointly with the communities and beneficiaries
- Close cooperation with the microfinance expert to ensure sustainable livelihood support
- Development and management of a training and capacity building Component.

In-depth knoaledge in the areas of private enterprise and cooperative development, fishery, processing & marketing of food products and gender enterprise development is sought. Experience of working with local communities in the North-East is essential, as is an ability to speak fluent Tamil and English language.

### COMMUNITY DEVELOPMENT OFFICERS

Experienced personnel are required to help with the implementation and monitoring of Solidar's community development, livelihood support and capacity building activities. Main tasks will be:

- Day-to-day liaison with and awareness raising and support of community/village-based groups
- Monitoring of and reporting on project progress
- Establishing and maintaining contacts with government authorities and local NGOs and INGOs, Experience in the areas of fishing, agriculture, sustainable livelihoods, small& medium enterprise development, microfinance and gender is sought. Candidates must demonstrate excellent communicaton skills with beneficiaries through proven track record of working with local communities in the North-East and the ability to speak fluent Tamil language.

Please send your CV and application letter to karin.voigt @sah.ch by 20th of November 2005:
Alternatively please mail to:

Ifaza Marikkar
Solidar-Office
2 Jawatta Ave
Colombo 05 (சி-13302)

or

Dr.Karin Voigt
Solidar-Office
156 Jaffna Road
Paranthan-kilinochchi

---

## UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF GRADUATE STUDIES
### Postgraduate Diploma in Library and Information Science
### Academic year 2005/06-Batch I

Applications are invited from Qualified candidates to enroll for the programme of study leading to a postgraduate diploma in Library and Information Science, scheduled to commence in January 2006.

**Course duration** :One academic year of 12 months duration
Lectures will be conducted from 4.00p.m to 6.00 pm
(on week days) and 9.00 a.m to 1.00p.m (on weekends)

**Medium of instruction:** Tamil

**Admission Requirements:**

Graduates possessing the following qualifications will be considered for admission to the P.G.Dip. in LIS programme.

a) A Bachelor's degree awarded from a recognized University or Higher Educational Institution.
b) A satisfactory working knowledge of English.
c) A Fair knowledge in Computer applications (preferred)

Preference will be given to applicants presently associate with work in the Lipraries.

**Course Fee:**
Rupees thirty thousand (Rs.30,000/-) per student.

**Selection:** By interview. If required written test on attitude and language proficiency will be conducted.

**Method of Application:**
Application forms and other details may be obtained from the Assitant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna either in person or by post on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a money order drawn in favour of the Bursar, University of Jaffns together with a self-addressed stamped envelope 23x10 cm in size.

**Closing Date for Application:** 25th November 2005.

Registrar,
University of Jaffna.
02/11/2005

(சி-13216)

---

# Vacancy Immediate
## *Car Pool Manager*
## *Closing Date: 9 November 2005*

The International committee of the Red cross, kilinochchi Subdelegation, is seeking for a qualified professional to carry out duties as a **Car pool Manager.**

**Core responsibilities** include:

- Planning and follow up ofall the movements through the lines
- Coordination of the field movements with other departments and sub- delegations
- Planning, organization and dispatching of a fleet of up 30 vehicles and drivers
- Ensures economic use of vehicles and generators
- establishment of service schedules for vehicle/ generator fleet
- Monitoring of fleet use and fuel consumption

The candidate should have the following **qualifications:**

- High school level or professional school of similar degree
- 2 Year work experience in a similar field (Logistics, Transport)
- Good command of spoken and written English and Tamil
- Computer literacy
- Valid driving licence (>5 Years), practical experience with driving of offroad vehicle
- Excellent teamplayer, stress-resistant personality

**Employment Conditions;**

Workplace: ICRC-offices in kilinochchi
According to ICRC's National Scale and employment conditions
Suitable candidates are invited to submit their complete CVs (incl. photocopies of relevant certificates) to ICRC's office in kilinochchi until **Wednesday, 9th November 2005.** Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE REDCROSS**
**Subdelegation kilinochchi**
**Iranaimadu Junction**
**kilinochchi**
**Phone: 0712375697**

(சி-13301)

# சர்வதேச கராத்தே போட்டியில் கலந்துகொள்ளும் மன்னார் வீரர்கள்



இம்மாதம் 30,31 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ள கராத்தே போட்டிகளில் சுமார் பத்து நாடுகளைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளார்கள். இப்போட்டியில் மன்னார் மாவட்டத்தைச் சார்ந்த தாழ்வுபாடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக வீரர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இவ்வாறான சர்வதேச தர போட்டிகளில் கலந்து கொள்வது இதுவே முதற்தடவையாகும் இவர்கள் செப்ரெம்பர் 03, 04 ஆம்திகதிகளில் அரசாங்க அதிபரின் முயற்சியாலும் கச்சேரி விளையாட்டுப் பிரிவினரால் அல். அஸ்ஷார் மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி முகாம் போட்டிகளில் கலந்து வெற்றிபெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பின் வரிசை வீரர்கள் (இடமிருந்து வலம்)

ரூ.அன்ரன் நிமால் சூஞ்ஞன், நீ.மே. பஸ்ரியன் குரூஸ், ச.சந்திராஜ் குரூஸ், ப. ஞானராஜ் பீரிஸ்.

முன் வரிசை வீரர்கள் (இடமிருந்து வலம்)

செல்வி. யூ. நெஸ்னிகாபீரீஸ், பஜெஸ்மன் பீரீஸ் (பயிற்சி ஆசிரியர்) யூ. அன்ரனிராஜ் பீரீஸ்



ஐரோப்பாவில் நடைபெறும் பிரிமியர் ஷிப் கால்பந்துப் போட்டியில் 3–0 என்ற கோல் கணக்கில் வெஸ்ட்ப்ரம் அணியை வென்ற நியுகாஸல் உதைபந்தாட்ட வீரர் மைக்கல் ஓவன் வெஸட்ப்ரம் வீரர் ஷோலா அமியோபியை மீறி கோல் அடிக்கும் காட்சியை முதலாவது படத்திலும் மகிழ்ச்சியை கொண்டாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

பிறிஸ்பேன் டெஸ்ட்

## பொண்டிங், ஹெய்டன் சதம் வலுவான நிலையில் அவுஸ்



பிறிஸ்பேனில் நடைபெற்று வரும் மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி மிகப் பலம் வாய்ந்த நிலையிலுள்ளது.

மூன்றாம் நாளான நேற்று 210 ஓட்டங்களில் மேற்கிந்தியத் தீவை சுருட்டிய அவுஸ்திரேலியா தனது இரண்டாவது இனிங்சில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதில் முதல் இனிங்சில் சதமடித்த பொண்டிங் இரண்டாவது இனிங்சிலும் சதமடித்து அசத்தினார். அவர் 104 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது உள்ளார். ஹெய்டன் 118 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் ஹைறல்ஸ் வீழ்த்தப்பட்ட விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். முன்னதாக பந்து வீச்சாளர் மெக்ராத்தின் அனல் வேக பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாதுபோன மேற்கிந்தியத்தீவு நேற்று வோர்னின் சூறாவளி பந்து வீச்சுக்கு எஞ்சிய விக்கெட்டுக்களையும் இழந்தது.

வோர்ன் ஐந்து விக்கெட்டுக்களையும் மெக்ராத் நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.அவுஸ். முதல் இனிங்ஸ் 435 ஓட்டங்கள். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

விளையாட்டு

## ஆர்ஜன்டீனாவுடனான சிநேகபூர்வ கால் பந்து போட்டி; இங்கிலாந்து அணியில் ஜோனாதன் வுட்கேட்



ஆர்ஜன்டீனா அணியுடன் வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் டேவிட் ஜேம்ஸ், ஜோனாதன் வுட்கேட் இருவரும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கோல் காப்பளரான ஜேம்ஸ் கடந்த ஓகஸ்ட்டில் நடைபெற்ற டென்மார்க்குடனான போட்டியொன்றின் போது திறமையாக செயற்படாதமையினால் அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார் றியல் மட்றிட் வீரரான வுட்கேட் காயம் காரணமாக அணியில் இடம் பெறாதிருந்தார்.

2004 ஆம் ஆண்டு சுவீடனுடனான போட்டிக்குப் பின்னர் வுட்கேட் தனது திறமையை இப்போட்டியில் வெளிப்படுத்துவார் என கருதி அவரை இணைத்துள்ளதாக பயிற்றுநர் ஸ்வன் கோறன் தெரிவித்துள்ளார். எனினும் றியோ பொடினன்ட் ஜோன், டெரி சோர் கெம்பல், ஜெமி கெரகர் ஆகிய வீரர்களும் இணைத்துக் கொள்ளப்படுவதால் இவரது வருகை நிச்சயமற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐந்தாவது ஒரு நாள் போட்டி இன்று அகமதாபாத்தில் பலத்த பாதுகாப்பு



இந்தியா- இலங்கை அணிகள் மோதும் ஒருநாள் தொடரின் ஐந்தாவது போட்டி அகமதாபாத்தில் இன்று பகல்-இரவு போட்டியாக நடைபெறுகின்றது. டில்லி குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து இப்போட்டிக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நகரெங்கிலும் பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி ஏழு போட்டிகளிலும் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. முதல் நான்கு போட்டிகளிலும் இந்திய அணி அட்டகாசமாக விளையாடி 4-0 என்ற முன்னிலையில் தொடரை கைப்பற்றிவிட்டது. பெரிய எதிர்பார்ப்பு இல்லாத ஐந்தாவது போட்டி இன்று அமதாபாத்தில் நடக்கிறது. இருப்பினும் எஞ்சிய போட்டியிலாவது வெற்றி பெற்று தனது கௌரவத்தை காப்பற்றிக் கொள்ள சிறிலங்கா அணி முயற்சிக்கும் என எதிர்பார்ப்பதால் இப்போட்டியும் பரபரப்பு நிறைந்ததாகவே காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இங்கே பெண் புலி போல தாவி பாய்கிறவர் சீனாவைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீராங்கனை பெங்யுன் கிழக்கு ஆசிய கேம்ஸ் மக்காவ் நகரில் நடைபெற்று வருகிறது அதில் நேற்று முன்தினம் 100 மீற்றர் ஹேர்டில்ஸ் போட்டியில் பெங்யுன் தங்கப்பதக்கம் வென்றார்.



ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியை இந்திய அணி பாடாய்படுத்திக் கொண்டிருக்க, இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலியின் நிலைமையை பாருங்கள், மும்பையில் நடந்து வரும் துலீப் கிண்ணப் போட்டியில் கிழக்கு மண்டல அணிக்காக விளையாடி வருகிறார். அவர் சிம்பாப்வே கிரிக்கெட் அணித்தலைவர் அணி வீரருக்கு எதிராக [illegible] கேட்கிறார்.

## பாகிஸ்தான் தொடர் சவால் மிக்கது பீற்றர்சனுக்கு பயிற்சியாளர் எச்சரிக்கை



பாகிஸ்தானுடனான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடினமான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் டங்கன் பிளச்சர் கெவின் பீற்றர்சனுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கார்டியன் சஞ்சிகையிடம் அவர் தெரிவிக்கும்போது; பீற்றர்சனின் பணியையும் அவரின் துடுப்பாட்டநுட்பத்தையும் விரும்புவதாகவும் கூறியிருக்கிறார்.

போட்டிகளில் வெல்வதைப் பற்றி கூறுவது கடினமானது எனக் குறிப்பிடும் அவர் எமது அடுத்த பணி ஏழாவது டெஸ்ட் தொடரை வெல்வதே என்று கூறிய பிளச்சர் ஆஷஸ் தொடர் போன்று இதுவும் கடினமான சவால் என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி அனுபவமிக்க வீரர்களைக் கொண்ட அணி. தமது அணியில் இருவரைத்தவிர ஏனையோர் இளம் வீரர்கள் என்றும் குறிப்பிட்டார்.

## நான்காவது போட்டி மழையால் பாதிப்பு



நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் டர்பனில் நடைபெற்ற நியூசிலாந்து தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் போட்டி மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டு போட்டி எவ்வணிக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இப்போட்டியில் தென்னாபிரிக்காஅணி முதலில துடுப்பெடுத்தாடியது. எனினும் நியூசிலாந்து வீரர்களின் சிறந்த பந்து வீச்சுக் காரணமாக 20 ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் கைவிடப்பட்டது.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் மூன்றுக்குப் பூச்சியம் என்ற ரீதியில் தென்னாபிரிக்கா தொடரை ஏற்கனவே கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அடுத்த போட்டி நாளை சென்சூரியனில் நடைபெறும்.



## சிந்தனைக்கு

மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# சமாதானத்தின் எதிர்காலம்!

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைமைப் பதவியில் இருந்து விலகுவது குறித்து நோர்வே அரசு பரிசீலித்து வருவதாக விசேட பிரதிநிதியாக சமாதான முயற்சிகளில் பங்காற்றியவரும்– தற்போதைய நோர்வே அமைச்சருமான எரிக்சூல்ஹெய்ம் தெரிவித்துள்ளமையானது இவ்விடயத்தில் நோர்வே அடைந்துள்ள அவநம்பிக்கையின் வெளிப்பாடாகவே கொள்ளத்தக்கதாகும்.

இனிமேல் யுத்த நிறுத்த விடயத்தில் முன்னேற்றகரமான பாத்திரம் எதையும் வகிக்கமுடியாது என்ற நோர்வேத் தரப்பின் அபிப்பிராயமே இத்தகையதொரு முடிவிற்கு வருவதற்குக் காரணமாக இருந்திருக்கமுடியும். இவ்வாறான நிலை ஏற்படுவதற்கு யுத்தநிறுத்த உடன்பாடு தொடர்பாகவும் நோர்வே தரப்புத் தொடர்பாகவும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் கைக்கொண்ட அணுகுமுறையே காரணம் எனில் மிகையாகாது.

யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி இன்றைக்கு ஏறத்தாழ மூன்றேமுக்கால் வருடங்கள் கடந்துவிட்டன.பெயரளவில் யுத்த நிறுத்தம் அமுலில் உள்ளதே ஒழிய அதன் இலக்கு–அதன் நோக்கம் நிறைவேறியதா என்றால் இல்லை. குறிப்பாக இவ் யுத்தநிறுத்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று இயல்புவாழ்வைத் தோற்றுவித்தல் என்பது.

ஆனால், ஆரம்பம் முதலே சிங்கள ஆட்சியாளர்களும், அரச படைகளும் இவ் யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல் செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. மாறாக இடையூறையே செய்தனர். யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றப்படவேண்டியவை மூன்றே முக்கால் ஆண்டுகள் கடந்தும் நிறைவேற்றப்படவில்லை. சில யுத்தநிறுத்த விதிகளை அரசாங்கம் நிறைவேற்றுவதில்லை என்ற முடிவுடனும், யுத்த நிறுத்த உடன்பாட்டின் முக்கிய சரத்துக்களின் நோக்கங்களை இல்லாது ஒழித்துவிடும் போக்கிலுமே செயற்பட்டு வந்துள்ளன.

குறிப்பாக சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. மாறாக அத்தகைய ஆயுதக்குழுக்கள் இல்லை என்றே கூறிவருகின்றது. அடுத்ததாக உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற ரீதியில் மக்களின் குடியிருப்புகள் மற்றும் விவசாய, மீன்பிடி நடவடிக்கைகளுக்கான நிலம் மற்றும் கடற்பகுதியில் இருந்தும் சிறிலங்கா ஆயுதப்படையினர் வெளியேற மறுக்கின்றனர்.

அரசாங்கத்தின் இவ்விரு நடவடிக்கைகளும் யுத்தநிறுத்த உடன்பாட்டின் நோக்கத்தை முற்றிலும் நிராகரிப்பதாகவே உள்ளது. அதாவது மக்களின் இயல்புவாழ்க்கைக்கு ஒருபுறத்தில் முட்டுக் கட்டைபோடும் அதேவேளை இன்னொருபுறத்தில் ஆயுத மோதல்களும் அமைதியின்மையைத் தோற்றுவிப்பதாகவுமுள்ளன.

ஆனால், அரசாங்கத்தின் இப் போக்கில் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் நோர்வே தரப்பினரால் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தமுடியவில்லை. அதாவது உடன்பாட்டை அமுலாக்கம் செய்யவோ அன்றி மோசமடைந்து செல்லும்அமைதிச் சூழ்நிலை மேலும் மோசமடையாமல் தடுத்துநிறுத்தவோ முடியவில்லை.


குறிப்பாக அரசாங்கத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்கள் விவகாரத்தில் நோர்வே தரப்பு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறமுடியவில்லை. இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே ஆயுதக்குழுக்கள் இயங்குகின்றன என்பதைக் கண்காணிப்புக்குழு ஊர்ஜிதம் செய்தபோதும்சரி, ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தபோதும் சரி அரசாங்கத்தரப்பால் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

மாறாக கண்காணிப்புக்குழுவின் மீதே கண்டனம் எழுப்புகின்றனர். தாமே ஆரம்பித்துவைத்த மறைமுகப் போருக்குத் தாமே பலரைப் பலிகொடுக்க வேண்டிய நிலை உருவாகையில் சிறிலங்கா அரசியல் வாதிகளும் சரி, சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பினரும் சரி கண்காணிப்புக்குழு மீதே குற்றம் சாட்டுகின்றனர்.

அத்தோடு, நோர்வே அரசிற்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வதோடு நோர்வே தரப்பு ஒருதலைப்பட்சமாக– விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக நடந்துகொள்வதாகவும் குரல் எழுப்புகின்றனர். அதாவது சிறிலங்கா பொலிசாரும், ஆயுதப் படையினரும் மேற்கொள்ளவேண்டிய வேலைகளை கண்காணிப்புக்குழு மேற்கொள்ளவேண்டும் என்கிறார்கள். இந்த ரீதியில் அதிகாரங்கள் வழங்கப்படாத பணிகளுக்காகவும் கண்காணிப்புக் குழு மீது குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

அதிலும் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் சனாதிபதிப் பதவிக்கும் போட்டியிடும் ஒரு தரப்பினர் நோர்வேயின் சமாதான முயற்சிகள் யுத்தநிறுத்த உடன்பாடு, யுத்தநிறுத்தக் கண்காணிப்பு போன்றவற்றைப் பலமாகக் கண்டனம் செய்வதோடு தாம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தால் நோர்வேயை சமாதான முயற்சிகளில் இருந்தும், யுத்தநிறுத்த கண்காணிப்புப் பணியில் இருந்தும் வெளியேற்றுவதோடு, யுத்தநிறுத்த உடன்பாட்டை மாற்றியமைக்கப் போவதாகவும் கூறிவருகின்றனர்.

இத்தகையதொரு நிலையில்தான் நோர்வே அரசு தற்பொழுது யுத்த நிறுத்தக் கண்காணிப்புத் தலைமைப் பதவியில் இருந்து வெளியேறுவது பற்றிச் சிந்திப்பது போல் உள்ளது. அதாவது முன்னேற்றம் காணப்படாத முயற்சியில் தமது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவதை நோர்வே தரப்பு விரும்பாது இம் முடிவிற்கு வந்திருக்கலாம். இம்முடிவை நோர்வே தரப்பு தீவிரமாக பரிசீலித்து செயற்படுமானால்,இனங்களின் சமாதான முயற்சிகள் கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.



# காமினி அத்துகோரளையை கொல்ல முயன்றவர்கள் இன்று முதலைக்கண்ணீர் வடிக்கின்றார்கள்

## - சகோதரி தலதா அத்துகோரளை குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த காமினி அத்துகோரளையைப் படுகொலை செய்ய முயன்றவர்கள இப்போது முதலைக்கண்ணீர் வடிக்கிறார்கள் என்று காமினி அத்துகோரளையின் சகோதரி தலதா அத்துகோரளை குற்றம் சாட்டியுள்ளார்.

காமினி அத்துகோரளையின் திடீர் மரணத்தின் பின்னணியில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க இருப்பதாகவும்,மகிந்தராஜபக்ஷ சனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டதும் இது தொடர்பிலான விசாரணைக்காக ஆணைக்குழு அமைக்கப்படும் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருந்தார்.

இதுதொடர்பாக காமினி அத்துகோரளையின் சகோதரி தலதா அத்துகோரளை வெளியிட்டுள்ள அறிக்கையில்:

எமது சகோதரரின் மரணத்தை மீண்டும் தோண்டியெடுக்க வேண்டாம்.அது காமினி அத்துகோரளையின் துணைவியார் மற்றும் அவரது மூன்று பிள்ளைகளைக் கடுமையாக பாதிக்கும்.

அத்துகோரளை குடும்பத்தைச் சேர்ந்த நாம் யாரும் இது போன்ற விசாரணைகளுக்குக் கோரிக்கை விடுக்கவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியின் மதிப்பீட்டைச் சிதைக்க மங்கள சமரவீர இதைப் பயன்படுத்திக் கொள்கிறார்.

கடந்த காலங்களில் காமினி அத்துகோரளையைப் படுகொலை செய்ய முயன்றவர்கள் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் ஜே.வி.பியினரும்தான்.இப்போது ஏன் சனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு அவர்கள் முன்வர வேண்டும்?

எமது சகோதரர் உயிரோடு இருந்தவரை அவரது தொகுதிக்குள் பொதுசன ஐக்கிய முன்னணியினர் மற்றும் ஜே.வி.பியினரது அரசியல் காடைத்தனங்களை அனுமதித்ததில்லை.இப்போது அந்த அணியினர் முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர்.

காமினி அத்துகோரளையின் 25 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் அவர் நிராகரித்திருந்த ஒரே அரசியல் வாதி மங்கள சமரவீரதான். அத்துகோரளையின் உடல் உத்தியோகபூர்வமாகவே பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.மூன்று மருத்துவர்களால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. அதனால் அவரது மரணத்தில் எமக்கு எவ்வித சந்தேகமுமில்லை. திடீரென ஏற்பட்ட மாரடைப்பால்தான் அவர் உயிரிழந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

# வன்முறை வாக்களிப்பு நிலையங்கள்; பட்டியல் தயாரிப்பில் தேர்தல் திணைக்களம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலின்போது வன்முறைகள் மற்றும் மோசடிகள் நடைபெறக்கூடிய வாக்களிப்பு நிலையங்களின் பட்டியலை விரைவில் தன்னிடம் கையளிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பட்டியலிடப்படும் வாக்களிப்பு நிலையங்களுக்கான பாதுகாப்பை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுவதாக உதவித் தேர்தல் ஆணையாளர் ரசிக பீரிஸ் கூறினார்.

வன்முறைகள் நடைபெறக் கூடிய வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பான விபரங்களை பொலிஸ்மா அதிபரிடம் தேர்தல் ஆணையாளர் கையளிப்பார். வடக்கு-கிழக்கில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பிற்கென விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

தேர்தல் கடமைகளுக்கென நியமிக்கப்படும் அரச சேவையாளர்கள் தங்கள் கடமைகளுக்கென ஒழுங்காக சமூகமளிக்காதுவிடின் அவர்களுக்கெதிராக 17ஆவது அரசியலமைப்புத் திருத்தத் திற்கமையத் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கு முன்னரும் தேர்தல் கடமைகளுக்கு சமூகமளிக்காத அரச சேவையாளர்களிடம் அதற்கான காரணத்தை வினவி அவர்கள் சேவையாற்றும் இடங்களுக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இம்முறை அதனைவிடக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார். சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் அரச சேவையாளர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

# படைகளில் இருந்து தப்பியோடியோர் அம்பாந்தோட்டையில் வன்முறையில்

(கொழும்பு)

சிறிலங்கா படைகளிலிருந்து தப்பியோடியவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கும்பல் ஒன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித்பிரேமதாச கருத்துத் தெரிவிக்கையில்:. .குறித்த கும்பல் தனது ஊடகச் செயலாளரைக் கடுமையாகத் தாக்கியுள்ளதாகவும் இதனால் அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கும்பலின் நடவடிக்கைகள் காரணமாக சனாதிபதித் தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதற்கு தடையாகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (32)

# யார் சனாதிபதியாக வந்தாலும் வாக்குறுதிகளை நிறைவேற்றப்போவதில்லை

## - ஜே.வி.பி.

(கொழும்பு)

சனாதிபதியாக யார் வந்தாலும் அவர்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றப் போவதில்லை என ஜே.வி.பி யினர் தெரிவித்துள்ளனர்.

முதன்மை வேட்பாளர்கள் இருவரும் வழங்கும் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியுமா என்று ஜே.வி.பி. கட்சியின் அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒருவர் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பால் குவளை வழங்கப் போவதாகக் கூறும்போது, மற்றவர் பகலுணவு வழங்கப் போவதாகக் கூறுகிறார். இவ்வாறு இரு தரப்பினராலும் வழங்கப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா? இவர்கள் எவரும் பதவிக்கு வந்தவுடன் பேரதிசயங்களை நிகழ்த்திவிடுவார்கள் என்று நாம் ஒருபோதும் நம்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 12அமைச்சர்கள் பிரதிஅமைச்சர்களுடன் ரணில் இரகசிய ஆலோசனை

சிறிலங்கா அரசாங்கத்தின் 12 அமைச்சர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

அமைச்சரவை அந்தஸ்து கொண்ட ஐந்துஅமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் ஏழு பேருடனும் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் இந்தப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் பற்றி இந்த இரகசியப் பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தனித்தனியாகவும் குழுக்களாகவும் இந்த அமைச்சர்களையும், பிரதி அமைச்சர்களையும் சந்தித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் நெருங்கிய தொடர்புள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டிலேயே இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் மிகவும் இரகசியத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் ரணில்விக்கிரமசிங்கவை சந்தித்தபோது இணக்கம் கண்டுள்ளனர். அந்த இணக்கப்பாடு என்ன என்பது பற்றி இதுவரை எதுவும் வெளியிடப்படவில்லை.

சனாதிபதித்தேர்தல் முடிவுகள் வெளியானதன்பின் காபந்துஅரசாங்கமொன்றை அறிவிக்க இந்த அமைச்சர்கள் இணங்கியுள்ளனர்.

காபந்து அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள்அங்கம் வகிப்பார்கள். சனாதிபதியாக பதவியேற்று காபந்து அரசை அறிவித்து 24 மணித்தியாலத்திற்குள் பாராளு மன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலையும் நடத்த ரணில் விக்கிரமசிங்கவும் இந்த அமைச்சர்களும் இணக்கம் கண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### வரும் 15ஆம்....

பொறுப்பேற்கும் வரை பதில் சனாதிபதியாக செயற்படுவதற்கு சட்டத்தினூடாக அதிகாரம் உள்ளது. அவர் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறு வதற்கு முன்னதாக கலந்து கொள் ளும் உத்தியோக பூர்வ வைபவம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடைபெறவுள்ளது. தனது பதவி யிலிருந்து ஓய்வு பெற்றதும் சிறிது காலத்திற்கான வெளிநாட்டுப் பயணமொன்றை சந்திரிகா மேற்கொள்ளவுள்ளார். அதன்பின் நாடு திரும்பி முன்னாள் சனாதிபதிக்காக வழங்கப்பட்டிருக்கும் அலுவலகத்தைத்திறந்து அங்கிருந்து தனது எதிர்கால நடவடிக்கைகளை சந்திரிகா மேற்கொள்வார் என்று சனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

### சனாதிபதி...

தமிழ்மக்கள் கடந்த கால அரசியல் வரலாற்றின் அடிப்படையில் நல்ல படிப்பினைகளைப் பெற்றுள்ளனர். வரலாற்றில் தமக்கு ஏற்பட்ட-இழைக்கப்பட்ட துரோகங்கள் பற்றிய தெளிவின் அடிப்படையில் அவர்கள் அரசியல் தெளிவோடும் விழிப்புணர்ச்சியோடும் தேர்தலை பகிஷ்கரிக்கும் முடிவினை அவர்கள் எடுத்திருக்கலாம். மக்களின் சுதந்திரமான முடிவாக இருப்பதால் அதற்கு ஏதுவாக அவர்கள் சில நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் எடுக்கும் போது அதற்குத் தடையாக விடுதலைப்புலிகள் இருக்க மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

### தமிழ் மக்கள்...

ஒட்டுமொத்தமாக அனைத்து வாக்குறுதிகளையும் மகிந்த ராஜபக்ஷவே வழங்கிவிட்டார்.

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கும், தமிழ் மக்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. இரண்டு வேட்பாளர்களுமே சிங்கள மக்களை மையமாக வைத்துத்தான் சிந்திக்கிறார்கள். தம்முடைய வாக்குவங்கி சிக்கலாக இருப்பதால் தான் ரணிலும் வேறுவழியின்றி தமிழ் மக்கள் பற்றிப் பேசுகிறார். இருவருமே சமமான நிலையில் உள்ளவர்கள்தான். எவருடைய வாக்கு வங்கியை மற்றவர் அபகரிக்கிறாரோ அதன் அடிப்படையிலேயே வெற்றி தீர்மானிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டு வருகிறது.

சிங்கள மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு நிச்சயமாக சிங்களத் தலைவர்களுக்கு உண்டு. ஜே.வி.பிக்கு நிறைவேறாத ஆசைகள் நிறைய உள்ளன. அவர்களது எண்ணங்கள் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்கின்றனர். அதனால் தவியாய்த் தவித்து துடியாய் துடித்து என்ன செய்தேனும் பதவியைக் கைப்பற்றி தங்களுடைய கட்சியைத் திடப்படுத்தி தங்களுடைய மக்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்காக என்னென்ன வழிகளால் பயணிக்க முடியுமோ அந்த வழிகளில் எல்லாம் அவர்கள் பயணிக்கிறார்கள்.

இந்தத்தேர்தலின் நடப்பும் நடைமுறைகளும் தமிழ்மக்களுக்கு எதுவித சம்பந்தமும் இல்லை. சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் பற்றி அமெரிக்காவினது ரிச்சாட் ஆர்மிடேஜிடம் கேள்வி கேட்டால் விடுதலைப் புலிகள் கூட்டாட்சி அமைப்புக்குத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டும் என்று கூறுகிறார். சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கும் தமிழ் மக்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதைத்தான ஆர்மிடேஜ் போன்றவர்களின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு முக்கியமானதாக அமையப் போகிறது. இந்தத் தேர்தலின் ஊடாக தமிழ் மக்கள் தெரிவிக்கப் போகிற முடிவு என்பது உலகத்துக்கு உடனடியாக தெரியப் போகிறது. இதை உலகம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே எங்களுடைய மக்கள் இரண்டு வேட்பாளர்களது வரலாற்றைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் தங்களது செயற்பாட்டை மேற்கொண்டு தமது முடிவை சர்வதேச சமூகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். எம் மக்கள் என்ன மாதிரியான பதிலளிப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அது தொடர்பில் நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. எம் மக்களுடைய அரசியல் முதிர்ச்சி இந்தத் தேர்தலில் வெளிப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

நீண்ட காலமாக அறிமுகமான இரு கட்சிகளது பழைய முகங்களுக்கு ஊடாக மகிந்தர் என்ற புதிய முகம் அறிமுகமாகி இருக்கிறது. இந்தப் புதிய முகத்தின் பயங்கரமான அலங்கோலமான தோற்றம் எம் மக்களை கடும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. தென்னிலங்கையின் சாதாரண மக்களின் பிரதிநிதியாகத் தன்னைக் காட்டிக்கொள்ள 75 வீதம் கிராமங்களில் வாழும் சிங்களவர்களின் பிரதிநிதியாக காட்டிக்கொள்ள மகிந்தர் முயற்சிக்கிறார். இதற்காக கொழும்பு மேட்டிமைத்தன்மையோடு தொடர்பில்லாத கிராமப்புற சிங்களவர்களுக்கான வாக்குறுதிகளை அளித்து வருகிறார். இது ஒன்றும் புதிது அல்ல.

1956ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியை உருவாக்கிய பண்டாரநாயக்க கையாண்ட அதே முறையில் தான் இன்று மகிந்தவும் செயற்பட்டு வருகிறார். அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. மகிந்தர் தெளிவாகச் சொல்லி விட்டார். எனக்கும் தமிழ் மக்களுக்கும் சம்பந்தமில்லை என்று. எனவே அவரைப் பற்றி எங்களுக்குச் சிக்கலே இல்லை. ஆனால் ரணில் பெரிய வேடமிட்டுக் கொண்டிருக்கிறார். இது பற்றி எமது மக்கள் தெளிவாக இருத்தல் வேண்டும். ரணில் அண்மைக்காலமாகப் பேசி வருவதன் பின்னால் உள்ள நச்சுக் கருத்தைத் தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களை போரில் வெல்ல முடியாது என்பது ரணிலுக்குத் தெரியும். அதனால் தந்திரத்தால் வெல்ல நினைக்கிறார். தாம் சனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்ட பின்னர் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து ஒரு அரைகுறையான தீர்வை பல்வேறு வடிவங்களில் சமர்ப்பித்து மிக நீண்ட காலத்திற்கு இந்தப் போராட்ட முதிர்ச்சியிலிருந்தும் அனுபவத்திலிருந்தும் புலிகளை பின் தள்ள வைத்து புலிகளின் நாட்டுப் பற்று தொடர்பிலான இலக்கை விலக்கச் செய்கிற முழு தந்திரோபாய முயற்சியில் ரணில் ஈடுபட்டுள்ளார். இது தான் அண்மைக்காலமாக ரணில் கதைத்து வரும் பேச்சுக்களின் பின்னணி.

இது சாதாரண மக்களுக்கும் புரிவது கடினமாக இருக்கலாம். உற்று நோக்கிப் பார்த்தால் மகிந்த ராஜபக்ஷ சொல்வதைத்தான் ரணில் சொல்கிறார். மகிந்தர் வெளிப்படையாக சொல்கிறார். ஆனால் ரணில் மறைமுகமாக பூடகமாக சொல்கிறார். இருவரும் சொல்வதில் எந்த வேறுபாடும் இல்லை.

அன்று பண்டாரநாயக்க வின் செயற்பாடு எமது விடுதலை இயக்கத்தின் பிறப்புக்குக் காரணமாக இருந்தது. இன்று மகிந்தவின் செயற்பாடு எமது போராட்டத்தின் வெற்றிக்குக் காரணமாக இருக்கும். அன்று பண்டாஒருகட்சியை அமைத்து தனது குடும்ப ஆட்சியை உருவாக்கினார். இன்று அவரது பாணியிலேயே செயற்பட்டு பண்டா குடும்ப ஆட்சியை முறியடித்து இன்னொருகுடும்ப ஆட்சியைக் கொண்டு வர மகிந்தர் முயற்சிக்கிறார். இந்த நிலையில்தான் ரணிலின் நிலைப்பாடு இரண்டும் கெட்டானாக இருக்கிறது. எவ்வாறு 1956இற்குப் பின்னர் இந்தத்தீவு இரத்தத்திலே குளிப்பதற்கு செய்யப்பட்டதோ அதேபோலவே மகிந்தரின் செயற்பாடும். இந்தத்தீவின் சிங்களத் தீவானது இரத்தத்தில் குளிப்பதற்கும், தமிழ்த்தீவு விடுதலை பெறுவதற்குமான வழியைக் கொடுக்கும் என்றுதான் எண்ணுகின்றோம். தமிழ் மக்களை முற்றுமுழுதாகப் புறம்தள்ளி அவர்களை திசைதிருப்பச் செய்வதற்காகவே ஒரு அரசியல் யுக்திதான் இந்தத் தேர்தல் என்பது எமது நிலைப்பாடு என்கிறார் க.வே. பாலகுமாரன்.

# குடுலாலுக்கு சமாதான நீதிபதி பதவி: விசாரணை அறிக்கை விரைவில் தாக்கல்

(கொழும்பு)

சிறிலங்கா போதைப் பொருள் குழுவைச் சேர்ந்த குடுலாலுக்கு சமாதான நீதிபதி பதவி வழங்கியமை தொடர்பிலான விசாரணை அறிக்கை மூன்று நாட்களில் நீதி அமைச்சிடம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

விசாரணைக்குழுவிடம் முன்னிலையாகுமாறு குடுலால் கேட்டுக் கொள்ளப்பட்டும் அவர் வரவில்லை. அதனால் விசாரணை அறிக்கையை நிறைவு செய்து மூன்று தினங்களினுள் நீதியமைச்சரிடம் கையளிக்க அந்தக் குழு முடிவு செய்துள்ளது.

ஹெரோயின் கடத்தலில் ஈடுபடுவதாகக் கூறப்படும் லால் பீரிஸ் எனப்படும் குடுலாலுக்குப் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் பரிந்துரையில் சமாதான நீதிபதி பதவி வழங்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியானது. இதையடுத்து அவரின் நியமனத்தை தற்காலிகமாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன இடை நிறுத்தினார். இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசேட குழுவையும் நியமித்தார். போதைப் பொருள் கடத்தல் சம்பந்தமாக இந்திய அரசால் தேடப்படும் நபரான குடுலால், எவ்வித குற்றமும் செய்யாதவர் என்று சான்றிதழ் வழங்கியதாகக் கூறப்படும் கடவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ்துறையின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி, நீதியமைச்சின் உதவிச் செயலாளர் ஆகியோரிடம் இந்தக் குழு விசாரணைகளை மேற்கொண்டது.

# தேசியத் தொலைக்காட்சி விளம்பரங்களுக்கு பணம் செலுத்தாத மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் விளம்பரங்களை பணம் செலுத்தாது சிறிலங்கா தேசியத்தொலைக் காட்சியில் ஒளி பரப்பியதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த விளம்பரங்களை ஒளி பரப்புவதற்கான திகதியையும், நேரத்தையும் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சார பிரிவு தேசியத் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வழங்கியது.

அதற்கென செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளில் ஐந்து இலட்சம் ரூபாவை மட்டுமே செலுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது. அமைச்சர் மங்கள சமரவீர ஐந்து இலட்சம் ரூபாவைச் செலுத்தி விட்டு மிகுதி 200 இலட்சம் ரூபாவை பின்னர் வழங்குவதாகவும் அந்த விளம்பரங்களை ஒளிபரப்புமாறும், தொலைக்காட்சி சேவைப் பணிப்பாளரிடம் கூறியுள்ளார்.

தேர்தல் விளம்பரங்கள் வெளியிடுவதற்கு முன்னர் அதற்கான கட்டணங்களைச் செலுத்த வேண்டும் என்ற கூட்டுத்தாபன ஒழுங்கு விதிகளை மீறி மகிந்தவின் விளம்பரங்களை தேசியத் தொலைக்காட்சி ஒளிபரப்புவதாகவும் இதே போன்று சுயாதீனத் தொலைக் காட்சிக்கும் உத்தரவிடப்பட்டிருப்பதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

எந்தவொரு நீதிமன்றத்தினதோ அல்லது நிறுவனத்தினதோ எதிர்ப்போ அல்லது தடையோஅற்ற ஒளிபரப்பிற்கென ஏற்கனவே பணம் செலுத்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பால்மா விளம்பரமொன்றினை சிறிலங்கா தேசியத்தொலைக் காட்சியில் ஒளிபரப்பத்தடை விதிக்கப்பட்டுள்ள தாகவும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

### பொத்துவில்...

தகவலையடுத்து கடற்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு டிங்கி படகுகளைக் கைப்பற்றியதாக சிறிலங்கா கடற்படையின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட படகுகள் திருகோணமலை கடற்படை முகாமிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் படகுகளில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருக்கவில்லையெனவும் சிறிலங்கா கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படகுகள் என்ன காரணத்திற்காக பொத்துவில் கடற்பிரதேசத்தில் நங்கூரம் இடப்பட்டிருந்தன என்பது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறிலங்கா கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

### ஆயுதக்....

நிலைமைகளுக்குப் பொறுப்பு. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்து 1.8 இன்படி, அனைத்துத் தமிழ் துணைப்படை ஆயுதக் குழுக்களும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 30 நாட்களுக்குள் வெளியேற்றப்படவேண்டும். தற்போது அமைதி முயற்சிக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அந்த ஆயுதக் குழுக்கள் இயங்கி வருவதால் அவர்கள் களையப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# சாவு அறிவித்தல்

## கந்தையா மயில்வாகனம்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் முரசுமோட்டை 3 ஆம் யூனிற்றை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கந்தையா மயில்வாகனம் 06.11.2005 அன்று காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற ஜானகியின் அன்புக் கணவரும், கெங்கநாயகி, உலகநாயகி, கமலநாயகி, வசந்தநாயகி, ஈஸ்வரி (ஜேர்மன்), உதயகுமார், (முருகேஸ் கராச், திருவையாறு,17/1), சந்திரகுமார், இந்திரகுமார், (கனடா), பாமினி, குமுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திரன், கெங்கநாதன், யோகநாதன், இராசரட்ணம் (வெற்றியாள் இரும்பகம், முரசுமோட்டை), சத்தியமூர்த்தி (ஜேர்மன்), கௌசல்யா, வசந்தினி, வதனி கனடா காலம் சென்ற யோகராஜா, அழகரட்ணம் (குழந்தை களஞ்சியம் (A. K. R) கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசையா, இராஜேந்திரம், காலம் சென்ற சிவக்கொழுந்து மனோன்மணி, கெங்கநாதன் ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியை (07.11.2005) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் (17/1 திருவையாறு, முருகேஸ் கராச், உதயன்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முருகேஸ் கராச்,
17/1 ,திருவையாறு,
கிளிநொச்சி.

(6425)

தகவல்:-
மகன்
உதயன்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.